Registered as a News Paper

பக்கங்கள் 06 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 14 (30-10-1992) வெள்ளிக்கிழமை ஓசை 255

## ஓய்வூதியத்தை அதிகரிக்க அரசிடம் வேண்டுகோள்

அரசாங்க சேவையில் உள்ள அரச ஊழியர்களுக்கு அடுத்த ஜனவரியில் இருந்து சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்பொழுது சகல அரச ஓய்வூதியர்களுக்கும் கணிசமான அளவு ஓய்வூதியம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று வடமாநில ஓய்வூதியர் சம்மேளனம் நாட்டின் ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சி அணியினர்களுக்கும் ஓர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட விசேட வாழ்க்கைப் படி ரூபா 260 இதுவரை ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# பிரதமர், கூட்டுப்படை தளபதி யாழ். விஜயம்

# காரைநகர் படைத்தளத்தில் முக்கிய மாநாடு

## பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய்வு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிலுள்ள இராணுவ தளங்களுக்கு விஜயம் செய்த சிறிலங்காப் பிரதமரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா காரைநகர் கடற்படைத் தளத்தில் உயர் ராணுவ அதிகாரிகளுடன் மாநாடு ஒன்றை நடத்தினார். இம்மாநாட்டில் கூட்டுப்படை நடவடிக்கை தலைமைத் தளகர்த்தா ஹமில்டன் வனசிங்கா, வடபகுதி ராணுவத்தளபதி பிரிகேடியர் தளுவத்த உட்பட யாழ். குடாநாட்டுத் தளபதிகளும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்களும் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் யாழ். குடாநாட்டின் ராணுவ நிலைமை குறித்தும், அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பலாலிக்கு விஜயம் செய்த சிறிலங்கா பிரதமருடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏயர்மார்சல் வோல்டர் பர்னான்டோ, கூட்டுப்படைதலைமைத் தளபதி ஜெனரல்ஹமில்டன் வனசிங்க ஆகியோர் வந்திருந்தனர்.

இவர்கள் பலாலியில் இராணுவத்தினருடன் உரையாடியதுடன் பதுங்கு குழிகளையும் பாதுகாப்பு அரண்களையும் பார்வையிட்டதனை ரூபவாஹினி காண்பித்தது. இங்கு உரையாற்றிய சிறிலங்கா பிரதமர் இராணுவத்தினருக்குச் செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ள சலுகைகள் குறித்தும் உரையாற்றியதுடன் படையினருக்கு உற்சாகமூட்டும் விதத்திலும் உரையாற்றினார் என தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் ஊர்காவற்றுறைக்குச் சென்ற சிறிலங்கா பிரதமர் அங்குள்ள படையினருடன் நிலைமை குறித்து கலந்துரையாடினார்.

அங்கிருந்து காரைநகர் கடற்படைத் தளத்திற்குச் சென்ற அவர் அங்கு வடபகுதி தளபதி பிரிகேடியர் றோகான் தளுவத்த வடபகுதி கடற்படை தளபதி கப்டன் டி கே. தசநாயக்கா, யாழ். தளபதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். பல்கலைக்கழக

## மருத்துவ பீடமாணவர் நேற்று பகிஷ்கரிப்பு

### -பீடாதிபதியின் செயலுக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் தமது விரிவுரைகளை நேற்று பகிஷ்கரித்தனர். மருத்துவபீட மாணவர்கள் மீது மருத்துவ பீடாதிபதி மேற்கொண்ட கெடுபிடி நடவடிக்கைகளை கண்டித்தும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும் இப்பகிஷ்கரிப்பு நடைபெற்றது.

மருத்துவபீட மாணவர்களை தகாத வார்த்தைகளால் பேசுதல், பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்களது நடமாட்டத்தை காரணமின்றிக் கட்டுப்படுத்தல் மாணவர்களைமிரட்டல், உணவுச்சாலையில் உணவருந்துவதைக்கட்டுப்படுத்தல்ஆகியநடவடிக்கைகளைக் கண்டித்தும் இவற்றைவிட மருத்துவ பீட முதலாம் வருட மாணவர்களது துவிச்சக்கரவண்டிகளது காற்றைத் திறத்தல், இவ்வண்டிகளது வால்கட்டைகளைக்கைப்பற்றுதல் போன்ற நடவடிக்கைகளைக் கண்டித்தும் இப்பகிஷ்கரிப்புப் போராட்டம் நடைபெற்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரரின் பெற்றோர் வதிவிடங்களை அறிவிக்குக

தமிழீழ மாவீரர்களது பெற்றோர்கள் தமது தற்போதைய இருப்பிடங்களை உடன் அறியத்தருமாறு தமிழீழ மாவீரர் பணிமனையினர் கேட்டுள்ளனர்.

தமிழீழ மாவீரர்நாளை முன்னிட்டும் மாதாந்தம்நடைபெற்றுவரும் மாவீரர் வீரவணக்கநிகழ்வுகளை முன்னிட்டும் இம்முகவரிகளை அறிந்து கொள்ள விரும்புவதாக மேற்

துள்ள பத்திரிகைக்கான செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

இன்றைய இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து வாழ்ந்து வரும மாவீரர் குடும்பங்கள் தங்கள் அயலிலுள்ள மாவீரர் பணிமனைகளிலோ தமிழீழ மாவீரர் பணிமனைகளிலோ தங்கள் முகவரிகளைக் கொடுத்துதவு

## பொலநறுவை தமிழ் கிராமங்கள் படையினரால் சுற்றிவளைப்பு

### - பல இளைஞர் கைது

(பொலநறுவ)

பொலநறுவ மாவட்டத்தின் எல்லைப்புற தமிழ் கிராமங்களான திபுலாகல, சொறி

கடந்த 25ஆம் திகதி இடம்

படையிலேயே இச் சுற்றி வளைப்பு இடம் பெற்றுள்

## மீட்புநிதி சேகரிப்பு

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மீட்புநிதி சேகரிப்பு நாளை முற்பகல் 9.00 மணி முதல் 10.00 மணிவரை கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயத்திலும் முற்பகல் 11.00 மணிமுதல் 12.30 மணி வரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், பிற்பகல் 2.00 மணிமுதல் 4.00 மணிவரை கொடிகாமம் திருநாவுக்கரசு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் பட்டியல்

தற்போது தினசரி வெளியாகிக்கொண்டிருக்கும் மாவீரர் பட்டியலில் காணப்படும் தவறுகள், இடம்பெறத்தவறிய மாவீரர் பற்றிய விபரங்கள் என்பவற்றை உடன் தமிழீழமாவீரர்பணிமனைக்கோ அல்லது ஈழநாதம் பணிமனைக்கோ தெரியப்படுத்துமாறு வேண்டுகின்றோம். மாவீரர் பட்டியல் வெளியாகும் இறுதித்தினத்தன்று இத்திருத்தங்களும், இடம்பெறத் தவறிய மாவீரர் பெயர் விபரங்களும் வெளியிடப்படும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

## விமானப்படை ஹெலி

கெடுபிடி நடவடிக்கைகளை கண்டித்தும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும் இப்பகிஷ்கரிப்பு நடைபெற்றது.

மருத்துவபீட மாணவர்களை தகாத வார்த்தைகளால் பேசுதல், பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர் முதலாம் வருட மாணவர்களது துவிச்சக்கரவண்டிகளது காற்றைத் திறத்தல், இவ்வண்டிகளது வால்கட்டைகளைக்கைப்பற்றுதல் போன்ற நடவடிக்கைகளைக் கண்டித்தும் இப்பகிஷ்கரிப்புப் போராட்டம் நடைபெற்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரரின் பெற்றோர் வதிவிடங்களை அறிவிக்குக

தமிழீழ மாவீரர்களது பெற்றோர்கள் தமது தற்போதைய இருப்பிடங்களை உடன் அறியத்தருமாறு தமிழீழ மாவீரர் பணிமனையினர் கேட்டுள்ளனர்.

தமிழீழ மாவீரர்நாளை முன்னிட்டும் மாதாந்தம்நடைபெற்றுவரும் மாவீரர் வீரவணக்கநிகழ்வுகளை முன்னிட்டும் இம்முகவரிகளை அறிந்து கொள்ள விரும்புவதாக மேற்படி பணிமனையினர் விடுத்துள்ள பத்திரிகைக்கான செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

இன்றைய இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும மாவீரர் குடும்பங்கள் தங்கள் அயலிலுள்ள மாவீரர் பணிமனைகளிலோ தமிழீழ மாவீரர் பணிமனைகளிலோ தங்கள் முகவரிகளைக் கொடுத்துதவுமாறுதமிழீழ மாவீரர் பணிமனையினர் கேட்டுள்ளனர்.

தீவுப்பகுதி நிர்வாகத்திற்கு

# மேலதிக அரச அதிபராக ஓய்வுபெற்றராணுவ அதிகாரி

(கொழும்பு)

யாழ் குடாநாட்டில் ராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ள பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை மேலும் வலுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென 72 வயதான ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி கேணல் பி. ஏ. டி. ரதநாயக்கா யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக ஒக்டோபர் 24ஆம் திகதிமுதல் நியமிக்கப்பட்டிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தீவுப்பகுதி உட்பட காரைநகர் மாதகல், பலாலியை அண்மித்த பகுதிகளில் மக்களை மீண்டும் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளையும், சிவில் நிர்வாக ஏற்பாடுகளையும் இவர் மேற்கொள்வார் என்றும் கூறப்படுகிறது.

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ்

# வவுனியாவில் 500 வீடுகள் சிங்களவருக்குவழங்கப்படும்

வவுனியாவின் கிராம எழுச்சித் திட்டத்தின்கீழ் அமைக்கப்படவுள்ள வீடுகளில் தமிழர் புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அங்கு கட்டப்படவுள்ள 1000 வீடுகளில் தமிழருக்கு 500 வீடுகள் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேனகுரேக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

தமிழர் பெரும்பான்மையாக வாழும் வவுனியாவில் இன விகிதாசாரம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாமல் சிங்களவருக்கு அதிகமான வீடுகள் வழங்கப்படவுள்ளன. இன விகிதாசார அடிப்படையில் 850 வீடுகள் தமிழருக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று புகாரில் தெரிவிக்கப்படுகிறது.

# நேற்றும் பலாலியிலிருந்து அகோர ஷெல் தாக்குதல்

வலிகாமம் வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளை நோக்கி நேற்று நள்ளிரவு சிறிலங்கா இராணுவம்அகோரஎறிகணை தாக்குதல்களை நடாத்தியது.

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட லூவ் ஆட்டிலறி எறிகணைகள் அச்சுவேலி, பத்தமேனி, வளலாய் பகுதிகளிலும் தெல்லிப்பழை, அளவெட்டி, ஏழாலை, குப்பிளான் விளான், பண்டத்தரிப்பு, சில்லாலை பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன.

இதே வேளை காரைநகர் கடற்பரப்பிலிருந்து கடற்படைப் பீரங்கிப் படகுகள் பொன்னாலை, மூளாய் பகுதிகளையும் அராலித்துறையையும் நோக்கி பீரங்கித்தாக்குதல்களையும் நடாத்தியது. இத்தாக்குதல்களால்ஏற்பட்ட சேதவிபரங்கள்தெரியவில்லை.

இராணுவ நிலைமை குறித்தும், அடுத்தகட்ட [illegible] செய்திகள் தெரிவிக்கின்றன.

பலாலிக்கு விஜயம் செய்த சிறிலங்கா பிரதமருடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏயர்மார்சல் வோல்டர் பர்னான்டோ, கூட்டுப்படைதலைமைத் தளபதி ஜெனரல்ஹமில்டன் வனசிங்க ஆகியோர் வந்திருந்தனர்

இவர்கள் பலாலியில் இராணுவத்தினருடன் உரையாடியதுடன் பதுங்கு குழிகளையும் பாதுகாப்பு அரண்களையும் பார்வையிட்டதனை ரூபவாகினி காண்பித்தது. இங்கு உரையாற்றிய சிறிலங்கா பிரதமர் இராணுவத்தினருக்குச் செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ள சலுகைகள் குறித்தும் உரையாற்றியதுடன் படையினருக்கு உற்சாகமூட்டும் விதத்திலும் உரையாற்றினார் என தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் ஊர்காவற்றுறைக்குச் சென்ற சிறிலங்கா பிரதமர் அங்குள்ள படையினருடன் நிலைமை குறித்து கலந்துரையாடினார்.

அங்கிருந்து காரைநகர் கடற்படைத் தளத்திற்குச் சென்ற அவர் அங்கு வடபகுதி தளபதி பிரிகேடியர் ஹோகான் தளுவத்த வடபகுதி கடற்படை தளபதி கப்டன் டி. கே. தசநாயக்கா, யாழ். தளபதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பொலநறுவை தமிழ் கிராமங்கள் படையினரால் சுற்றிவளைப்பு

## - பல இளைஞர் கைது

(பொலநறுவ)

பொலநறுவ மாவட்டத்தின் எல்லைப்புற தமிழ் கிராமங்களான திபுலாகல, சொறிவில, வசம்முதுகல, கரப்பொல ஆகியவற்றை இராணுவம், பொலிசார் சுற்றிவளைத்து பல தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

கடந்த 25ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் முஸ்லிம்களினால் காட்டிக் கொடுக்கப்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். முஸ்லிம்கள் கொடுத்த தகவல்களின் அடிப்படையிலேயே இச் சுற்றிவளைப்பு இடம் பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை. இதனால் இப் பகுதிகளில் பதற்றம் நிலவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மூதூர் பகுதி மக்கள்

# அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துச் செல்லத்தடை

திருமலை மாவட்டத்தில் சிவில் நிர்வாகம் நடைபெறுவதாகக்கூறப்படும்பகுதிகளிலும் அத்தியாவசியப் பொருள்களை கொண்டுசெல்ல இராணுவம் தடைவிதித்து வருகிறது.

மூதூர் உதவிஅரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்த கட்டைபறிச்சான், சேனையூர், கட்டைத்தறிச்சேனை, சம்பூர், கூனித்தீவு, இலங்கைத்துறை, வீரமாநகர், பாட்டாளிபுரம், பாலைக்குடியிருப்பு, மேன்காமம் ஆகிய பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச்செல்ல இராணுவம் தடை விதித்துள்ளது

கிழமையில் நான்கு நாட்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மட்டும் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். ஆளுக்கு 3 கிலோ அரிசி, அரைக்கிலோ கோதுமை மா, அரைக்கிலோ சீனி மற்றும் மிகக் குறைந்தளவு பொருள்களே கொண்டுசெல்ல முடியும்

ஞாயிற்றுக்கிழமை மட்டுமே குழந்தைகளுக்கான பால்மா, அரைலீற்றர் மண்ணெண்ணெய் எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்படுகிறது.

சகல வகையான மருந்துப் பொருள்களும் தடைசெய்யப்பட்டுள்ளன. உர வகைகள், கம்பி ஆணி, மெழுகுதிரி, கற்பூரம், பிஸ்கட், குளிர்பானம் பிளேட் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

கொக்கட்டிச்சோலை படுகொலை

# குடலிகம மட்டுமே குற்றவாளியாம் ஏனையோர் விடுதலை

கொக்கட்டிச்சோலை படுகொலைச்சம்பவத்தில்குற்றஞ் சாட்டப்பட்டிருந்த 20 படையினருள் லெப்டினன்ட் குடலிகம என்பவரைமட்டும் குற்றவாளியாக தீர்ப்பளித்த இராணுவ நீதிமன்றம் ஏனைய 19 பேரும் நிரபராதிகள் என்று விடுதலை செய்துள்ளது என தெரியவருகிறது.

இச்சம்பவத்தில் லெப்டினன்ட் குடலிகமவிற்கு எதிராக மூன்று குற்றச் சாட்டுகள் முன் வைக்கப்பட்டிருந்தன. 1991 ஜூன் 12ஆம் திகதி மயிலடித்தீவு மற்றும் முதலைக்குடா ஆகிய கிராமங்களில் மேலும் 19 படையினருடன் இணைந்து தீவைப்பு, மக்களுக்கும், உடைமைகளுக்கும் அழிவு மற்றும் காயங்களை உருவாக்கியதற்கும் ஏனைய சிப்பாய்களை அதற்கு அனுமதித்தவர் என்ற வகையில் படையினருக்குப் பொறுப்பாய் இருந்த குடலிகம குற்றம் காணப்பட்டார்.

அடுத்து படையினரால் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களின் உடல்களை தீயிட்டு அழித்தார் என்ற விடயத்திலும் அவர் குற்றம் காணப்பட்டார்.

மூன்றாவது குற்றச் சாட்டான மேற்படி கிராம மக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மீட்புநிதி சேகரிப்பு

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மீட்புநிதி சேகரிப்பு நாளை முற்பகல் 9. 00 மணி முதல் 10.00 மணிவரை கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயத்திலும் முற்பகல் 11.00 மணிமுதல் 12.30 மணி வரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், பிற்பகல் 2 00 மணிமுதல் 4.00 மணிவரை கொடிகாமம் திருநாவுக்கரசு

(6 ஆம் பக்கம் பார்க்க)

உடன் தமிழீழமாவீரர்பணிமனைக்கோ அல்லது ஈழநாதம் பணிமனைக்கோ தெரியப்படுத்துமாறு வேண்டுகின்றோம். மாவீரர் பட்டியல் வெளியாகும் இறுதித்தினத்தன்று இத்திருத்தங்களும், இடம்பெறத் தவறிய மாவீரர் பெயர் விபரங்களும் வெளியிடப்படும் என்பதை வாசகர்களுக்குஅறியத் தருகின்றோம்.

# விமானப்படை ஹெலி தரையில் மோதிச் சேதம்

[கொழும்பு]

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான பெல்-212 ரக ஹெலிக்கப்டர் ஒன்று இறங்குமபோது தரையில் மோதியது.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பதுளை விஜயத்தின்போது ஜனாதிபதியின் அவசரதேவை நிமித்தம் பயன்படுத்தப்படுவதற்காக பதுளைக்கு அனுப்பப்பட்ட ஹெலிகப்டரே தரையில் மோதி நொருங்கியது.

விமானிகள் ஹெலிகப்டரை தரையில் இறக்கும்போது சரிபார்த்து இறக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது விமானிகள் இருவரும் காயமின்றி உயிர் தப்பினர்.

விமானிகளின் கவனக்குறை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தப்பி ஓட முயன்றபொலிசார் அதிகாரிகளால் கைது

(வவுனியா)

கடமையின் போதுதப்பிஓட முயன்ற ஆறு சிங்களப் பொலிசாரை இராணுவப்பொலிசார் கைது செய்த சம்பவம் ஒன்று கடந்த சனிக்கிழமை வவுனியாப் பகுதியில் நடைபெற்றுள்ளது

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; சம்பவதினம் நண்பகல் வவுனியா புகையிரத நிலையத்திற்கு சீருடையில் வந்த ஆறு சிங்களப் பொலிசார் பொதுமக்கள் தங்குமிடத்திற்குள் புகுந்து அங்கு தமது சீருடைகளைக் களைந்து மறைத்து விட்டு சிவில் உடைகளை அணிந்து கொண்டு கொழும்பு நோக்கி புறப்பட இருந்த ரயிலில் ஏறி உட்கார்ந்து கொண்டனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைவிரிவுரையாளருக்கு சம்பளம் மீளாய்வு

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களில் கடமையாற்றும் ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், போதனாசிரியர்கள், விரிவுரையாளர்கள் முதலானோரின் சம்பளங்கள் மீளாய்வு செய்யப்படவுள்ளன. அரசாங்கம் கொள்கை அளவில் இந்த முடிவை எடுத்துள்ளது.

பல்கலைக் கழகங்களின் கடைசி சம்பள மீளாய்வு 1989 ஜனவரியில் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது அன்று வெளிநாட்டமைச்சராக இருந்த ஏ சி எஸ் ஹமீத் நடத்திய பேச்சுவார்த்தைகளின்மூலம் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இன்று மூன்றாண்டுகளின் பின் இதனை மீளாய்வு செய்ய அவர் இணக்கம் தெரிவித்திருந்தார். தாம் இன்று ஆற்றும் சேவையைக் கருத்திற் கொண்டு தமக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என பல்கலைக்கழக ஊழியர்களும் ஆசிரியர்களும் அண்மையில் அடையாள வேலை நிறுத்தம் செய்தது தெரிந்ததே.

**மண்வளம் பேண மழைவளம் காண**
**மரமொன்று நடுவோம்**

## வரி விளம்பரம்

### பற் சிகிச்சை நிலையம்

பற்சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில்) கே. கே. எஸ். வீதி, கொக்குவில் தினசரி; 4 பி. ப. — 6 பி. ப. ஞாயிறு; 10 மு. ப. — 2 பி. ப. (3215)

### வெளிவந்துவிட்டது

''மாற்றம்'' காலாண்டு மக்கள் சஞ்சிகை, சிறுகதை, பொது அறிவு, குறுக்கெழுத்துப் போட்டி, கட்டுரைகள், சுவையான புதினங்கள் போன்றவற்றைக் கொண்டு வெளிவந்துவிட்டது. ரூபா10/-ஆண்டுச் சந்தா ரூபா 35/- பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். (3542)

### தமிழ் அகராதி

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, மற்றும் ஓவியம், சினிமா, நாவல். சிறுகதை, அரசியல், இலக்கியம் போன்ற தரமான நூல்களும், துளிர், சலனம், சுபமங்களா போன்ற சஞ்சிகைகளும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [3218]

### சோதிடம்

சனீஸ்வரன், வியாழபகவான், செவ்வாய், இராகு-கேது மாற்றத்தினால், கைரேகை பிறந்த எண்ணால், தெசா புத்தியினால் உங்களுக்கு ஏற்படப் போகும் பலாபலன்கள் பற்றி அறிய வேலணை சோதிடர் V. A. சிவராசா 152 B அரசடி றோட், கந்தர் மடம். (3555)

### இன்று ராகு, கேது மாற்றம்

(30-10-92) ராகு கேதுக்கள் மாற்றமும், (04-11-92) செவ்வாய் மாற்றமும் ரூபா 7-50. பாடசாலை புத்தகங்கள், உபகரணங்களும் விற்பனையாகின்றன. மதுபுத்தகசாலை, கொக்குவில் சந்தி. மொடர்ன் ஸ்ரோர்ஸ், நெல்லியடிச்சந்தி. (ஜோதிட நூலாசிரியர் PROF. சத்தியதாஸன்) (3549)

### அநுமதிப் பரீட்சை (ஆண்டு 6)

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6, மாதிரி அநுமதிப் பரீட்சை 01-11-92 ஞாயிறு மு ப. 8-00, மு. ப. 10-00 நேரங்களில் நடைபெறும். ஆண்டு 6 அனுமதிக்கான துரித மீட்டற் பயிற்சியை பெற்றுக்கொள்ளலாம்.

## 8-ம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம்: 10 - 10 - 74

வீரச்சாவு: 22 - 10 - 92

### 2-மலெப். தமிழரசன்


(சத்தியானந்தன் சிவகுமாரன்)

அன்புள்ள பாசமுள்ள அம்மாவை இழந்தாய்
பதினான்காவது வயதினில் புலியுடன் இணைந்தாய்
புலிவீரன் தமிழரசன் ஆனாய்
கல்வி கற்கும் வேளையில்
புலிப்பாசறையில் பயிற்சி எடுத்தாய்
அராஜகத் தனம் புரியும் சிங்கள இராணுவத்தின்
கொட்டத்தை அடக்கிட களம் பல கண்டாய்
தமிழ்மக்கள் துயர்தீர்க்க ஈடுபட்டாய்
எல்லையினைக் காக்க சகவீரவேங்கைகளுடன் இயங்கினாய்
பல கொடுமைத்தனம் புரியும் இராணுவத்தைக்
கலைப்பதற்கு
22-10-92 அன்று ஆனையிறவு தனிலே மோதினாயோ..?
நெஞ்சினிலே ரவை (குண்டு] ஏந்தி
மறவர் குலத்திற்கு உரித்தான வீரச்சாவைத் தழுவி
இரண்டரை வருடங்களில் 2 ஆம்
லெப்டினன்ட் ஆனாயோ சிவகுமாரா... .....?

அதே தினத்தில் வீரச்சாவடைந்த
சக வீரவேங்கைகளுக்கும் இவ்வஞ்சலி சங்கமம்

அனுதாபங்கள் தெரிவித்த அனைத்துத் தமிழீழ மக்களுக்கும், விடுதலைபபுலிகள் இயக்கத்தினருக்கும் இரு கரம் கூப்பி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்
உன் பிரிவால் .....
அப்பா, உதயன் அண்ணா, தங்கை தமிழரசி, பெரியப்பா பெரியம்மா, விஜி அக்கா, மாமா, குஞ்சுமாமி, சிவா அக்கா சந்திரன்அண்ணா, மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்
அரியாலை, யாழ்ப்பாணம். (3548)

## நெஞ்சில் நிலைத்த 4-ம் ஆண்டு நினைவலைகள்



## 1993 - 6ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சை

விண்ணப்ப முடிவு திகதி; 03-11-1992

விண்ணப்பப் படிவம்- உரிய பாடசாலை அலுவலகத்தில் ரூபா 5/- செலுத்திப் பெறலாம்.

தகைமை: 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசிற்கு உரியபடி

பரீட்சைத் திகதி: 14.11.1992 உரிய பாடசாலை மண்டபம்

அதிபர்
யா/ஹாட்லிக் கல்லூரி,

அதிபர்
யா/மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை.

பருத்தித்துறை

(சி-5330)

## பனை அபிவிருத்திச் சபை

யாழ். மாநகர எல்லைக்குள்

### பனை நடுகைத் திட்டம்

★ அருகிவரும் 'கற்பகச்' செல்வத்தைக் காப்போம்
★ எதிர்காலச் சந்ததியின் ஆரோக்கியத்துக்கு உதவுவோம்
★ நகரத்தின் சுற்றுப்புறச் சூழலைப் பேணுவோம்

எம்மண்ணை வளம்படுத்த
ஒரு லட்சம் பனம்விதைகளை
நடும் இத்திட்டத்தில்
நகரமக்கள் ஒவ்வொருவரும்
இணைந்து கொள்ளுங்கள்

**இலவசம்**

★ பனம் விதைகள்
★ ஆலோசனைகள்
★ அழகிய வழிகாட்டி

ஆர்வமுள்ளோர்
உடன் தொடர்பு கொள்ளவும்:

பனை அபிவிருத்திச் சபை
தேசியவீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

மர நடுகை வாரத்தைச்
சிறப்படையச் செய்வோம்

( -5329)

## மல்லாகம் சாளம்பை கதிர்வேல் முருகமூர்த்தி ஆலய சூரன்போர் விழா

மேற்படி விழா சனிக்கிழமை (31-10-92) மாலை 3 மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து அபிஷேக ஆராதனைகளுடன் பூசை நடைபெறும் என்பதனை முருகன் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்
நிர்வாக சபையினர்

(சி-5324)

## ஒளியிழந்து ஓராண்டு



### நாகலிங்கம் சிவகுருநாதன்

தோற்றம்: 16-7-1948

மறைவு: 11-11-1991

எங்கள் தலைவன் ஒளி தந்து பிரகாசித்த வண்ணமிருந்த எங்கள் குடும்பம் இன்று எண்ணையில்லாமல் கருகும் திரி போல் ஆகி விடுமென்று ஒரு கணம் கூட நாங்கள் நினைக்கவில்லை எனினும் இந்த ஒளி இன்றி இருளில் தந்தளிக்கும் நாங்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

நன்றி

16, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்.

(3544)

## நினைவு கூருகின்றோம் 1992-10-30

1984-ம் ஆண்டு இதே தினத்தில் ...

### இன்று
### ராகு, கேது மாற்றம்

(30-10-92) ராகு கேதுக்கள் மாற்றமும், (04-11-92) செவ்வாய் மாற்றமும் ரூபா 7-50. பாடசாலை புத்தகங்கள், உபகரணங்களும் விற்பனையாகின்றன. மதுபுத்தகசாலை, கொக்குவில் சந்தி. மொடர்ன் ஸ்ரோர்ஸ், நெல்லியடிச்சந்தி, (ஜோதிட நூலாசிரியர் PROF. சத்தியதாஸன்) (3549)

---

### அநுமதிப் பரீட்சை (ஆண்டு 6)

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6, மாதிரி அநுமதிப் பரீட்சை 01-11-92 ஞாயிறு மு ப. 8-00, மு. ப. 10-00 நேரங்களில் நடைபெறும். ஆண்டு 6 அனுமதிக்கான துரித மீட்டற் பயிற்சியை பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3551)

---

### வெற்று போத்தலகள் தேவை

நல்லூர் கோவில் முன்பாக ஜாம் வெற்றுப்போத்தல் உடனடியாக தேவை நியாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளப்படும். வேலவன் ஸ்ரோர்ஸ், பருத்தித்துறைவீதி, நல்லூர். (3552)

---

### ஒய்வூதியர் விபரங்கள்

வடபகுதி ஓய்வூதியர்கள் விபரங்கள் சேகரிககப்படுகின்றன. அதற்கான திணைக்கள சுற்று நிருபத்திற்கமைவான படிவங்களை வடமாநில ஓய்வூதியர்கள் சம்மேளனபிரதேச பணிமனைகளில் ரூபா 3/- செலுத்தியும் தபால் மூலமாயின் ரூபா 5/- முத்திரை அனுப்பியும் பெற்றுக் கொள்ளலாம். பி. எஸ். திருச்செல்வம் 52, செம்மணி வீதி, நல்லூர். [3556]

---

### வவுனியாவில் ரெலோ

(கொழும்பு)

ரெலோ குழுவினரின் அலுவலகம் ஒன்று வவுனியாவில் அமையவிருக்கின்றது. இதுவரை காலமும் புளொட் அமைப்பு இங்கு இயங்கி வந்தது இனி இவர்களுடனும் இராணுவத்தினருடனும், இணைந்து ரெலோ குழுவினரும் செயலாற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### அநுரா இந்தியா செல்வார்

(கொழும்பு)


சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அநுரா பண்டார நாயக்கா இந்தியா செல்லவுள்ளார் என கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

பெரியம்மா, விஜி அக்கா, மாமா, குஞ்சுமாமி, சிவா அக்கா சந்திரன்அண்ணா, மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்
அரியாலை, யாழ்ப்பாணம். (3548)

---

## நெஞ்சில் நிலைத்த 4-ம் ஆண்டு நினைவலைகள்



## கப்டன் கனோஜி (அம்மான்)

[கிருஷ்ணபிள்ளை சிவராசா]

| விடுதலைக்காக | விடுதலைப்போரில் |
|---|---|
| 04- 02- 1951 | 30- 10- 1988 |

அன்புள்ளம் கொண்டவனே.
அன்புச் சோதரனே - எங்கள்
அண்ணாவே ''சிவா''
மூன் இருவர் பின் இருவர்
பல்கலை பட்டம் பெற்ற
அண்ணா தம்பிகள் - நம்
ஏழ்வரில் நடுநாயகமாய்
கபபன் கவி வடிக்கத்துடித்த
கம்பர் மலை தனில் அவதரித்த
கர்ம வீரனே கனோஜி (அம்மானே)
உன் எண்ணம் ஈடேற — அதுவரை
எம் இதயம் ஓயாது.
நீ பிறந்த வடமராட்சி!
நீ வளர்ந்த நெடுங்கேணி!!
நீ வழிகாட்டிய விஸ்வமடு!!! - மக்கள்
என்றும் உனை மறவார்.

உன் பிரிவால் வாடும்
அம்மா, ஐயா,
அண்ணாமார், அண்ணிமார்,
தம்பிகள், மைத்துனிமார்,
பெறாமக்கள், உற்றார்,
உறவினர்.

'கனோஜி இல்லம்'
சிவராசா வீதி,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.
(3505)

---

இணைந்து கொள்ளுங்கள்

## இலவசம்

★ பனம் விதைகள்
★ ஆலோசனைகள்
★ அழகிய வழிகாட்டி

ஆர்வமுள்ளோர்
உடன் தொடர்பு கொள்ளவும்:

**பனை அபிவிருத்திச் சபை**

தேசியவீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

மர நடுகை வாரத்தைச்
சிறப்படையச் செய்வோம்

( -5329)

---

## 1-ம் ஆண்டு நினைவலைகள்

| வீரப்பிறப்பு: | | வீரச்சாவு |
|---|---|---|
| 1975 |  | 1991 |
| — | | — |
| 11 | | 10 |
| — | | — |
| 04 | | 30 |

சிறப்புப் படை பிரிவைச் சேர்ந்த

## வீரவேங்கை இளங்கீரன்

பத்மநாதன் றஜீவன் (தையிட்டி)

ஆனையிறவில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

பதினாறாம் வயதினிலே — நீ
பாசாறை நோக்கிப் புறப்பட்டாய்
வதைக்கின்ற எதிரியை — நீ
மிதிக்கின்ற உணர்வோடு
போர்க் கோலம் பூண்டவன் - நீ
பள்ளியை மறந்தாய்
பயிற்சியை முடித்தாய் போராட - நீ
புலி வீரனாய்ப் புறப்பட்டாய்.

பெற்றார் உறவை மறந்தாய் - நீ
புனிதப் பாதையில் புறப்பட்டாய்
பெற்ற பெருமை காத்திட்ட றஜீவா - நீ
தையிட்டி மண் ஈன்ற புதல்வன்
நெறி தவறாப் புலிவீரர் சூடிய இளங்கீரா - நீ
களத்தில் காவியம் படைத்திட்டாய்
மாவீரா நீ சிரஞ்சீவி உன் பாதம்
மலர் தூவி இதயஅஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்,

''ஜெயந்தம்''
தாவடி தெற்கு,
கொக்குவில்.

அம்மா, அப்பா, தம்பிமார்,
மாமா, மாமி, பிள்ளைகள்
(3540)

---

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 16-7-1948 | 11-11-1991 |

எங்கள் தலைவன் ஒளி தந்து பிரகாசித்த வண்ணமிருந்த எங்கள் குடும்பம் இன்று எண்ணையில்லாமல் கருகும் திரி போல் ஆகி விடுமென்று ஒரு கணம் கூட நாங்கள் நினைக்கவில்லை எனினும் இந்த ஒளி இன்றி இருளில் தந்தளிக்கும் நாங்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

நன்றி

16, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்.

(3544)

---

## நினைவு கூருகின்றோம்
## 1992-10-30

1984-ம் ஆண்டு இதே தினத்தில் தெல்லிப்பழைப் பகுதியில் இராணுவத்தினரின் முற்றுகையின்போது வீரச்சாவெய்திய

**றோம்** (செல்லையா ஜெகநாதன் - நுணாவில் மேற்கு சாவகச்சேரி, யாழ்)

**அன்சார்** (நிக்கலஸ் மைக்கல் குரூஸ் - புனித. செபஸ்ரியார் வீதி, மன்னார்)

1986 ஆம் ஆண்டு காரைநகர்ப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினருக்கு எதிரான நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய

**பிறின்ஸ்லி** (அந்தோனிப்பிள்ளை சகாயதாஸ்- எமில் நகர், மன்னார்)

**கூலோஜன்** (சித்திரவேலாயுதம் கோபிதரன் - திருக் கோணமலை)

1987 ஆம் ஆண்டு கோப்பாயில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**நிசார்** (இந்திரலிங்கம் உதயரஞ்சன் - வல்வெட்டித் துறை, யாழ் ]

1988 ஆம் ஆண்டு தட்டுவன் கொட்டிப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**கப்டன் கனோஜி அம்மான்** (கிருஷ்ணபிள்ளை சிவராசா- சிவராசாவீதி, கம்பர்மலை வலவெட்டித்துறை)

பரந்தன் பகுதியில் இந்தியப்படை பதுங்கித் தாக்கியதில் வீரச்சாவெய்திய

**2-ம் லெப். விமல்** (செல்லத்தம்பி சிவசுப்பிரமணியம் - ஓமந்தை)

அச்சுவேலி - தோப்புப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**மதன்** (கமலநாதன் ரவீந்திரநாதன் - நவக்கிரி, புத்தூர், யாழ்.)

கஞ்சிக்குடிச்சாறுப் பகுதியில் பாம்புகடித்து எமைப் பிரிந்த

**செல்வா** (வேல்நாயகம் வசந்தராசா - பாண்டிருப்பு)

உமையாள்புரம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**அறிவழகன்** (குமரபுரம்)

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**இளங்கீரன்** (பத்மநாதன் ரஜீவன் - தையிட்டி)

ஆகியோரை இந்நாளில்
நினைவுகூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5328)

எமது மண்ணில் பிறந்தவர்களில் தற்குறிகளாகச் சுயநலம் மிக்கவர்களாக மடிந்தவர்களே அதிகம். ஒரு சிலர் மட்டும் சுயநலமற்றவர்களாய் அடிமைகளாக எங்கும் அகதியாக வாழும் தமிழ்பேசும் மக்களின் விடிவிற்காக, விமோசனத்திற்காகத் தம்மையே தற்கொடை செய்துகொண்டிருக்கின்றனர்.

ஓர் சிறந்த தலைமைத்துவத்தையும், கட்டுக்கோப்பான படையணியையும், இரும்பையொத்த மனோபலத்தையும் உடைய வேங்கை அணியில் தமிழ்மாறன் தன்னை இணைத்துக்கொண்டு போர்ப் பயிற்சியினைப் பெற பயிற்சிப் பாசறை நாடி வந்தான். இவனோடு பயிற்சி பெறும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. இவனது குழுவில் நானும் ஒருவன்.




மெலிந்த உயர்ந்த, பொது நிறம் உச்சி பிரித்து வாரப்பட்ட தலை, அழகான சிரித்த முகம் இவனது முகமே இவனது ஆற்றலையும். திறமையையும் வெளிக்காட்டி நிற்கும். இவன் தமிழ்மாறன் என்ற பெயரைத்தான் இயக்கப் பெயராகத் தெரிந்து கொண்டான். மிகப் பொருத்தமான பெயரைத் தெரிந்து கொண்டான்.

இவனோடு அறிமுகமாவதற்கு நான் அன்று பேச்சை ஆரம்பித்தபோது மிகவும் சாதாரணமாகத் தனது எளிமையான வாழ்க்கையை எடுத்துரைத்தான். தனது படிப்பைப் பற்றிக் கூறியபோது க. பொ. த. (உ/த) பரீட்சை எடுத்துள்ளதாகத் தெரிவித்தான். மேற்கொண்டு கேட்ட போது சில நிமிடம் மௌனமாக இருந்தான் அதற்குக் காரணம் தான் படித்தவன் என்பதை வெளிப்படுத்த அவன் விரும்பவில்லை. பின்

விற்கு அணிநடை பழக்குபவனாக எமது பயிற்சி ஆசிரியர்களால் நியமிக்கப்பட்டான். அவ்வளவிற்கு இவனதுதிறமையைப் பயிற்சி ஆசிரியர்களால் உணரக்கூடியதாக இருந்தது,

பயிற்சியின்போது வார இறுதி நாளான ஞாயிற்றுக் கிழமைகளில் நடக்கும் நிகழ்ச்சியில் இவன் பங்குபற்றாத நாளே கிடையாது. சில நாட்களில் இரண்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளான். எமது பயிற்சிப் பிரிவின் சிறந்த பாடகன், சிறந்த கவிதை எழுத்தாளன். இவன் கவிதைகளைப் பாடும்போது பலரது கண்களிலிருந்தும் நீர் வடிவதைக் காணக்கூடியதாக இருக்கும். அவ்வளவு உணர்ச்சியாகப் பாடுவான்.

விவாதம் என்றால் இவன் ஒரு அணிக்கு தலைமை தாங்குவான், எந்தத் த... யங்கம் கொடுத்தாலும் சிறப்பாகவும் சாதுரியமாகவும் எதிரணியுடன் விவாதிப்பான். போராளிகளினதும், பயிற்சி ஆசிரியர்களினதும், எதிரணியினரதும் பாராட்டுக்களைப் பெற்றுக்கொள்வான். இவனது ஆற்றலைப் பிரதிபலிப்பதாக பல கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுத்துருவாக்கியுள்ளான்.

பயிற்சியின்போது நடத்தப்பட்ட பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறுபவர்களுள் இவனும் ஒருவன். இவனுக்கு மிகவும்பிடித்தமானவன் வெப். நித்தி அவன் எந்நேரமும் சிரிப்பும் பகிடியும் இதனால் பரீட்சையில் புள்ளி குறைவாக எடுத்துவிட்டான். இதனால் கவலையடைந்த தமிழ்மாறன் அவனுக்கு அறிவுரை கூறி அவனை தான் படிக்கும் போது பக்கத்தில் இருத்திப் படிக்க வைப்பான். நித்தியும் தமிழ்மாறன் மீது பெருமதிப்பும் பாசமும் வைத்திருந்தான். தேங்காய் உடைத்து

தளபதியிடம் காட்டி இவனைத் தொடர்ந்து படிக்க விடும்படி கேட்ட போது எனக்குத் தெரிவித்த பதிலையே கூறிமறுத்துவிட்டான்

தீவகப் பிரிவு இராணுவப் பொறுப்பாளரால் இவன் கல்விக் குழுவிற்கு அனுப்பப்பட்டான். இவன் போராளிகளுக்குத் தேவையான போராட்ட வரலாறுகளையும்உலக பொது விடயங்களையும் போதிக்கும் அனுபவம் வாய்ந்த ஆசானாகவும், சகபோராளியாகவும் இருந்து கற்பித்தான். கல்விப் பிரிவில் இருக்கும் போது அங்கு நடந்த பரீட்சைகளில் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளான். நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில் சிறந்த கவிதைகளையும், பாடல்களையும் பாடி கல்விக் குழுவிலுள்ள போராளிகளின் விருப்பத்துக்குரிய போராளியாகக் காணப்பட்டான்.

இவன் யாழ். மாவட்டத் தளபதியிடம் தான் போர் முனைக்குச் செல்லப்போவதாக பல தடவைகள் கோரினான் இவனது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது ஆனையிறவில் 10.07.1991 இல் யுத்தம் தொடங்கிய நாள்முதல் வைத்தியசாலையில் காயப்பட்டவர்களின் விபரங்கள் எடுக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இவ்வேலையைச் செய்வது எளிதான காரியமல்ல. காயப்பட்டவன் வேதனையில் துடிக்கும் போது விபரம் கேட்கப்பட்டால் அவனது வாயிலிருந்து வரும் வார்த்தைகளை ஏற்கும் மனப்பக்குவம் தேவை. இவனிடம் காணப்பட்ட சாந்த குணமானது இவ்வேலையை இலகுவாகவும் திறமையாகவும் செய்ய உதவியது.

தொடர்ந்து இவன் கல்விக் குழுவில் பணியாற்றினான். இவன் தளராத உறுதியான மனத்தினன். தளபதியிடம் மீண்டும் தனது வேண்டுகோளை விட்டான் பலவாறு தேற்றியும்இசையாத இவனை ஒருவாறாக யாழ். மாவட்ட தாக்குதல் பிரிவில் இணைத்துக் கொண்டார், வளலாயில் முன்னேறிய இராணுவத்துடனான மோதல், தெல்லிப்பழையில் நடந்த மோதல்களில் இவன் துப்பாக்கியும் முழங்கியது. இவன் தனியக் கல்வியில் மட்டும் திறமை உள்ளவனாக இருக்கவில்லை. போராட்டச் சூழலில் களத்திலும் திறமையானவனாகக் காணப்பட்டான்.

பத்திரிகையில் வெற்றிலைக் கேணியில் படை குவிப்பு என்ற செய்தி தொடர்ச்சியாக

# குடாநாட்டின் மருந்துத் தட்டுப்பாடு; பொறுப்பு யாருடையது?

யாழ். குடாநாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு சமீபகாலமாய் மக்களின் கவனத்தைப் பெற்று வருகிறது. மருந்து விநியோகம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பொறுப்பாளர் சிலரைச் சந்தித்த போது மருந்துத் தட்டுப்பாடு குறித்து அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன.

சந்திப்பு: மதன்

## சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் Dr. பொ. இரத்தின சபாபதி



★ தனியார் துறையினரிடம் மருந்து கைவசம் குறைவு. அவர்களிடம் பெரும் மருந்துப் பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் வழக்கமாக அரச மருத்துவமனையை நாடாதவர்கள் வழமைக்கு மாறாக அரச மருத்துவ மனைகளை நாடி வருகிறார்கள். நோயாளர்களின் அதிகரிப்புக்கு ஏற்ப எம்மிடம் மருந்து கையிருப்பில் இல்லாதது அரச மருத்துவ மனைகளில் நிலவும் மருந்து பற்றாக்குறைக்கான ஒரு காரணமாகும்.

★ வவுனியா வழியாக மருந்து வகைகளைக் கொண்டு வருவதில் ஏற்படும் செலவினங்கள் அதிகம். இதன் காரணமாக தனியார் துறையில் மருந்து விலை அதிகமாகவே உள்ளது. அதிக விலை கொடுத்து மருந்தைப் பெற முடியாதவர்களும் அரச மருத்துவ மனைகளை நாடி வருவதால் எமக்குஏற்பட்டிருக்கும் அழுத்தம் அதிகம். மருந்துத் தேவையை முற்றாகச் சமாளிக்க முடியாத நிலையில் உள்ளோம். சிலவகை மருந்துகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவர ஜே. ஒ. சி. அனுமதி மறுத்துள்ளது இந்த நடவடிக்கையினால் குறிப்பிட்ட வகை மருந்துகளுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது.

★ யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்திய பணிமனைக்குத் தரப்படும் மருந்து

டின் சனத்தொகையில் குறிப்பிடக் கூடிய அளவு மாற்றம் ஏற்படவில்லை என்றாலும் வயிற்றோட்டம், மலேரியா, நெருப்புக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் மற்றும் விசர்நாய்க்கடி நோயும் அதிகரித்து வருவதால் மருந்து வகைகளின் தேவையும் அதிகரித்துள்ளது.

★ மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு 1993ஆம் ஆண்டிற்கான எமது நிதி ஒதுக்கீடு 175 லட்சம் ரூபாவாகும். அதிகரித்துள்ள மருந்துத் தேவை கருதி இந்த நிதி ஒதுக்கீட்டை 250 லட்சம் ரூபாவாக அதிகரிக்கும் படி கேட்டுள்ளோம்.

★ ★ ★

## வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம் பா. லிங்கநாதன் உபதலைவர்



★ மக்களுக்கு மருந்து வகைகளைத் தட்டுப்பாடு இல்லாமல் விநியோகிப்பது வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் பிரதான நோக்கமாகும். யாழ் குடாநாட்டிற்குத் தேவையான மருந்து வகைகளைக் கொணர்வதற்குக்கூட்டு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் (ஜே. ஒ சி.) கட்டுப்பாடுகளை விதித்துள்ளது முக்கியமாகப் பஞ்சு. பாண்டேஜ், ஸ்பிரிட், உயிர்முறிக் கொல்லி, (Antibiotics ஆகிய மருந்து வகைகளை யாழ். குடாநாட்

★ மருந்து விநியோகத்தில் மற்றொரு விரிசல் ஜே.ஓ.சி. யின் காலம் கடத்தும் நடவடிக்கையாகும். 1992 ஜனவரி முதல் பத்து மாத இடைவெளிக்குப் பிறகு ஜே ஓ சி. யின் 'மனித நேயம்' கண் திறந்துள்ளது ஓரளவு மருந்து எடுத்துவர அனுமதித்துள்ளார்கள்

★ முன்பெல்லாம் ஆங்கில மருந்து வர்த்தகர்கள் 40 விகிதம். 60 விகிதம் என்று லாபம் வைத்து விநியோகித்தார்கள். அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்ட சிலருடன் ஆலோசனை கலந்தபின் இலாபத்தின் உச்ச வரம்பு 20 விகிதம் என்று பணித்தார், கொழும்பிலுள்ள சப் - ஏஜெண்டுகள் மூலம் கொள்வனவு செய்யும் மருந்து வர்த்தகர்கள் ஏழரை விகிதம் கழிவு அவர்களுக்குக் கொடுக்கவேண்டியுள்ளது இந்தஇடையூறுகளினால் சில வர்த்தகர்கள் மருந்தை இறக்குமதி செய்வதில் மனதைச் செலுத்துவதில்லை. இவர்களை ஊக்குவிக்கும் வகையில் 20 விகித லாபத்தை 30 விகிதமாக உயர்த்தும்படி அரச அதிபரைக் கோரச் சங்கம் தீர்மானித்துள்ளது.

★ கப்பலில் வரும் மருந்துக் கொள்கலன்கள் இறக்கி முடிவதற்குள் உடைந்துவிடுகின்றன. பொதிகள் கொழும்புத் துறைமுகத்தில் உடைக்கப்பட்டுக் களவாடப்படுவதும் சகஜம். மருந்துப் பொருட்களை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு முழுப்பொறுப்பென்று கூறும் சர்வதேசச் செஞ்சிலுவைக் குழு இழப்பீட்டிற்குத் தான் பொறுப்பில்லை எனக் கையை விரித்துவிடுகிறது. இதனால் நஷ்டப்படும்

இதற்கு முதல்முறை குமணவில் 27 லட்சம் ரூபாவுக்கு வர்த்தகர் ஒருவர் மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்தார். அவர் சில்லறை வியாபாரியாகவும்செயற்பட்டதால் மருந்துகளை மற்றவர்களுக்கு விநியோகிக்க மறுத்து விட்டார். சங்கம் தலையிட்டு நிலைமையைச் சீர் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மொத்த வியாபாரிகள் மருந்துப் பொருள்களை பத்து விகிதத்துக்கு மேல் கையிருப்பில் வைத்திருக்கக் கூடாது என்று பணிக்கவேண்டும். இறக்குமதி செய்யப்பட்ட மருந்துப் பொருள்களை முறையே தனியார் மருத்துவர் மருத்துவ மனைகள் மற்றும் பார்மசிகளுக்கு வழங்கவேண்டும். வர்த்தகர்களிடம் கையிருப்புக் குறையும்பட்சத்தில் அவர்கள் வியாபார நோக்கில் மேலும் இறக்குமதி செய்வார்கள்.

★ குடாநாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டைக் குறைப்பதற்குப் பலசரக்கு வியாபாரிகளையும் மருந்து இறக்குமதி செய்ய நாம் அனுமதித்துள்ளோம் நாங்களும் மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்ய உள்ளோம் தாராளமாகச் செய்யலாம், ஆனால் எமது சங்கத்தில் பண வசதி குறைவு,

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அறிந்து கொள்ளுங்கள்

★ ஆஸ்திரேலியாவிலும் அதையடுத்த தீவுகளிலும் காணப்படும் 'வாத்தலகி' என்ற பறவை முட்டையிட்டு அடைகாத்து குட்டிகள்வெளி வந்ததும் பாலூட்டி வளர்க்கின்றது.

★ பல்கேரியாவில் பிறந்து லண்டனில் வாழ்ந்து ஜெர்மனிய மொழியில் எழுதி நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் - எலியாஸ் கேனட்டி

...து ஆற்றலையும், திறமையையும் வெளிக்காட்டி நிற்கும். இவன் தமிழ்மாறன் என்ற பெயரைத்தான் இயக்கப் பெயராகத் தெரிந்து கொண்டான். மிகப் பொருத்தமான பெயரைத் தெரிந்து கொண்டான்.

இவனோடு அறிமுகமாவதற்கு நான் அன்று பேச்சை ஆரம்பித்தபோது மிகவும் சாதாரணமாகத் தனது எளிமையான வாழ்க்கையை எடுத்துரைத்தான். தனது படிப்பைப் பற்றிக் கூறியபோது க. பொ. த. (உ/த) பரீட்சை எடுத்துள்ளதாகத் தெரிவித்தான். மேற்கொண்டு கேட்ட போது சில நிமிடம் மௌனமாக இருந்தான் அதற்குக் காரணம் தான் படித்தவன் என்பதை வெளிப்படுத்த அவன் விரும்பவில்லை. பின் எனது வற்புறுத்தலின் பேரில் ஏ. 2பி. சி. என மெதுவாகக் கூறினான்.

நான் இவனது செயலை வியந்து நீ வித்தியாசமானவனாயிருக்கின்றாய் என்று கேட்ட போது ஏளனமாகச் சிரித்த அவன், அண்ணை நான் படித்தால் எனது பெற்றோரும், குடும்பத்தாரும் பெருமைப்படுவர் என்பது உண்மை ஆனால் படித்து முன்னேறிய பெரும்பாலானோர் எமது சொந்த நாட்டிற்காக உழைக்கும் மனப்பக்குவம் அற்றவர்கள், போராட்டம் என்பது அவர்களைப் பொறுத்தவரை தேவையற்றது, இவ்வாறான எமது சமுதாயத்தில் நாம் வித்தியாசமானவர்களாகத் திகழவேண்டும் என்பதற்காகத்தான் இம்முடிவு எடுத்தேன் என்றான்.

ஆம்எமது போராட்டம் நீதியானது, நியாயமானது, நேர்மையானது. இப்போராட்டம் எல்லோருக்கும் பொதுவானது தமிழீழ இலட்சியம் அடையும் வரை முன்னெடுத்துச் செல்லப்படும் இப்போராட்டத்தில் தன்மானம் உள்ள எவனும் இணைந்துகொள்வான் என்ற எண்ணத்துடன் இவன் போராட்டத்தில் தன்னை இணைத்துள்ளான் என்பதை இவனது பதில்மூலம் அறியக் கூடியதாக இருந்தது தொடர்ந்து எமது பேச்சு போராட்டம் தொடர்பாகத் திசை திரும்பி எமது போராட்டப் பழைய வரலாறுகளை அலசினோம்,

இவனது பேச்சில் அடிக்கடி மேஜர் பிரசாத்தின் திறமைகளையும், ஆற்றல்கள் பற்றிக் கூறுவான் இவன் பிரசாத்தை மிகவும் நேசித்திருந்ததை இவனது பேச்சின்மூலம் அறியக் கூடியதாக இருந்தது. பயிற்சியின்போது ஓட்டத்திலும், உடற்பயிற்சியிலும் ஆரம்பத்தில் கஷ்டப்பட்டபோதும் சில நாட்களின் பின் மற்றவர்களை விட இவன் திறமையாகச் செய்தான். எமது குழுவும் பாராட்டுக்களைப் பெற்றுக்கொள்வான். இவனது ஆற்றலைப் பிரதிபலிப்பதாக பல கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுத்துருவாக்கியுள்ளான்.

பயிற்சியின்போது நடத்தப்பட்ட பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறுபவர்களுள் இவனும் ஒருவன். இவனுக்கு மிகவும்பிடித்தமானவன் லெப். நித்தி அவன் எந்நேரமும் சிரிப்பும் பகிடியும் இதனால் பரீட்சையில் புள்ளி குறைவாக எடுத்துவிட்டான். இதனால் கவலையடைந்த தமிழ்மாறன் அவனுக்கு அறிவுரை கூறி அவனை தான் படிக்கும் போது பக்கத்தில் இருத்திப் படிக்க வைப்பான். நித்தியும் தமிழ்மாறன் மீது பெருமதிப்பும் பாசமும் வைத்திருந்தான். தேங்காய் உடைத்து



லெப்டினன்ட்
**தமிழ்மாறன்**

முதலில் தமிழ்மாறனுக்கே கொடுப்பான் அவ்வளவிற்கு இருவரிடையில் பெரும் உறவு காணப்பட்டது.

இவனது வாயில் எந்நேரமும் சோகப்பாட்டு முணுமுணுப்பான் இவனுக்கு மிகவும் பிடித்தமானது யேசுதாசின் பாடலே ஏனெனில் இவனது குரல் தொனியானது அப்படியான பாடல்களுக்குரியதாகவே இருந்தது பயிற்சிக்காலம் முடிவடைந்து அந்த இன்ப நாட்களை எவ்வாறு மறப்பது அந்த இனிமையான நாட்களில் இவர்களின் உறவுகள் வளர்ந்து இறுக்கமாகி ஓர் குடும்பமாகிய நாட்கள், ஆனால் இன்று ...

தீவக இராணுவப் பிரிவுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இவனும் ஒருவன் இவன் தீவகத்தில் கடமையாற்றிய போது இராணுவம் முன்னேறிய சமயம் ஏற்பட்ட நேரடி மோதல்களில் இவன் துப்பாக்கி ரவைகள் எதிரியின் உடலை பதம் பார்த்ததுண்டு. இவ்வாறு திறமையை வெளிக்காட்டும் வேளையில் இவனது பெற்றோர்கள் இவனது பரீட்சை முடிவுகளை மாவட்டத் தொடர்ந்து இவன் கல்விக் குழுவில் பணியாற்றினான். இவன் தளராத உறுதியான மனத்தினன். தளபதியிடம் மீண்டும் தனது வேண்டுகோளை விட்டான் பலவாறு தேற்றியும்இசையாத இவனை ஒருவாறாக யாழ். மாவட்ட தாக்குதல் பிரிவில் இணைத்துக் கொண்டார். வளலாயில் முன்னேறிய இராணுவத்துடனான மோதல், தெல்லிப்பழையில் நடந்த மோதல்களில் இவன் துப்பாக்கியும் முழங்கியது. இவன் தனியக் கல்வியில் மட்டும் திறமை உள்ளவனாக இருக்கவில்லை. போராட்டச் சூழலில் களத்திலும் திறமையானவனாகக் காணப்பட்டான்.


பத்திரிகையில் வெற்றிலைக் கேணியில் படை குவிப்பு என்ற செய்தி தொடர்ச்சியாக வெளியானது. பின் பலவேகய II என்று பெயரிட்டு பெரியளவிலான இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இராணுவத்துக்கு உதவியாக கடல், ஆகாயத் தாக்குதல்கள் நடைபெற்றது தரையில் நடக்க அஞ்சிய இராணுவம் வெளிநாடுகளில் மண்டி

(5ஆம் பக்கம்பார்க்க

...ந்து வகைகளைக் கொண்டு வருவதில் ஏற்படும் செலவினங்கள் அதிகம். இதன் காரணமாக தனியார் துறையில் மருந்து விலை அதிகமாகவே உள்ளது. அதிக விலை கொடுத்து மருந்தைப் பெற முடியாதவர்களும் அரச மருத்துவமனைகளை நாடி வருவதால் எமக்குஏற்பட்டிருக்கும் அழுத்தம் அதிகம். மருந்துத் தேவையை முற்றாகச் சமாளிக்க முடியாத நிலையில் உள்ளோம். சிலவகை மருந்துகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவர ஜே. ஓ. சி. அனுமதி மறுத்துள்ளது இந்த நடவடிக்கையினால் குறிப்பிட்ட வகை மருந்துகளுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது.

★ யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்திய பணிமனைக்குத் தரப்படும் மருந்து வகைகள் சமாதான கால சூழ்நிலைக்குப் போதுமானது போர்க்கால சூழ்நிலைக்குப் போதாது

★ மக்களின் இடம் பெயர்வு, அகதி முகாம் வாழ்க்கை, ஊட்டச் சத்துள்ள உணவுக் குறைவு ஆகியவற்றால் மக்களின்தேகாரோக்கியம் குறைந்துள்ளது. யாழ். குடாநாட்



★ மக்களுக்கு மருந்து வகைகளைத் தட்டுப்பாடு இல்லாமல் விநியோகிப்பது வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் பிரதான நோக்கமாகும். யாழ் குடாநாட்டிற்குத் தேவையான மருந்து வகைகளைக் கொணர்வதற்குக்கூட்டு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் (ஜே. ஓ சி.) கட்டுப்பாடுகளை விதித்துள்ளது முக்கியமாகப் பஞ்சு, பாண்டேஜ், ஸ்பிரிட், உயிர்முறிக் கொல்லி, (Antibiotics ஆகிய மருந்து வகைகளை யாழ். குடாநாட்டுக்குள் எடுத்துவர வெளிப்படையான தடை உள்ளது உயிர் வாழும் உரிமைக்காக மன்றாடும் நோயாளர்களுக்கு அத்தியாவசிய மருந்து வகைகள் எட்டாதவாறு ஜே. ஓ சி, தடை செய்திருப்பதால் யாழ். குடாநாட்டில் மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யூறுகளினால் சில வர்த்தகர்கள் மருந்தை இறக்குமதி செய்வதில் மனதைச் செலுத்துவதில்லை. இவர்களை ஊக்குவிக்கும் வகையில் 20 விகித லாபத்தை 30 விகிதமாக உயர்த்தும்படி அரச அதிபரைக் கோரச் சங்கம் தீர்மானித்துள்ளது.

★ கப்பலில் வரும் மருந்துக் கொள்கலன்கள் இறக்கி முடிவதற்குள் உடைந்துவிடுகின்றன. பொதிகள் கொழும்புத் துறைமுகத்தில் உடைக்கப்பட்டுக் களவாடப்படுவதும் சகஜம். மருந்துப் பொருட்களை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு முழுப்பொறுப்பென்று கூறும் சர்வதேசச் செஞ்சிலுவைக் குழு இழப்பீட்டிற்குத் தான் பொறுப்பில்லை எனக் கையை விரித்துவிடுகிறது. இதனால் நஷ்டப்படும் சில வர்த்தகர்கள் மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்யத் தயங்குகிறார்கள் போலும்.

★ மருந்துத் தேவை விழிம்பு நிலைக்குத் தள்ள படுவதற்கு சிலர் சமகாலத்தில் மொத்த வியாபாரிகளாகவும், சில்லறை வியாபாரிகளாகவும் இருப்பதுவும் ஒரு காரணமாகும் இறக்குமதி செய்ய நாம் அனுமதித்துள்ளோம் நாங்களும் மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்ய உள்ளோம் தாரராளமாகச் செய்யலாம், ஆனால் எமது சங்கத்தில் பண வசதி குறைவு,

(5 ஆம் பச்கம் பார்க்க)

## அறிந்து கொள்ளுங்கள்

★ ஆஸ்திரேலியா விலும் அதையடுத்த தீவுகளிலும் காணப்படும் 'வாத்தலகி' என்ற பறவை முட்டையிட்டு அடைகாத்து குட்டிகள்வெளி வந்ததும் பாலூட்டி வளர்க்கின்றது.

★ பல்கேரியாவில் பிறந்து லண்டனில் வாழ்ந்து ஜெர்மனிய மொழியில் எழுதி நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் - எலியாஸ் கேனட்டி

★ ஒரு நாட்டின் கடல் எல்லை என்பது அந் நாட்டின் கடற் கரையில் இருந்து மூன்று கடல் மைல் அதாவது 6080 அடி தொலைவு தூரத்தைக் குறிக்கும்

கி. செல்மர் எமில்
ஊர்காவற்றுறை

# இலக்கை நோக்கி செயற்படத் தூண்டும் உன்னத இலக்கியம்

நெஞ்சை அழுந்தும் சுமைகள் விரல்களைப் பேனா பிடிக்கத் தூண்டுகிறது அழுந்தும் சுமைகளின் வலியிலிருந்து ஒரு படைப்பு பிரசவமாகின்றது உண்மை அனுபவங்களின் அடிப்படையில் தான் ஒரு கலாபூர்வமான படைப்பு பிறப்பெடுக்க முடியும் அதனால் தான் எழுது கோலின்வலிமை என்பது அதனுள் இருக்கும் மையிலிருந்து பிறப்பெடுக்கிறது என்பதை விடவும் அதனைப் பிடிக்கும் விரல்கள் சிந்திய கண்ணீரும் செந்நீரும் என்பது நிதர்சனமாகிறது இதற்கு மேஜர் பாரதியின் ''காதோடு சொல்லி விடு'' ஒரு நல்ல உதாரணமாகும் என்றே நம்புகின்றேன்.

நான் ஏன் எழுதுகின்றேன்? என்ற கேள்வியைக் கேட்டு எழுத்துலகில் எனது பெயர் பொறிக்கப்பட வேண்டும்என்பதற்காக எழுதவில்லைஎன்று அவரே பதிலும் கூறியுள்ளார். மேலும் என் எழுத்துக்கள் நான் வாழும் சமூகத்தில் ஒரு சின்னத் துடிப்பை ஏற்படுத்தினால் அதுவே என் எழுத்தின் வெற்றியென்பேன் என்றும் அவர் உணர்த்தியுள்ளார். அதாவது மேஜர்பாரதி பேனா பிடித்தது பொழுது போக்குவதற்காகவோஅல்லதுபடித்து ரசிப்பதற்கு சில பொழுது போக்கு படைப்புக்களைப் படைத்துவிடுவதற்கோஅல்ல, தான் வரித்துக் கொண்ட இலட்சியத்தின் நியாயத்தை எடுத்துச்சொல்வதற்கும்அந்த இலட்சியத்திற்காக போராடத் தூண்டுவதற்கும் தனது பேனாவையும் பயன்படுத்திய மேஜர் பாரதி தனது முயற்சியில் வெற்றி பெற்றுள்ளார் என்பதற்கு ''காதோடுசொல்லி விடு'' என்னும்தொகுப்புகட்டியம்கூறுகின்றது

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் வெளியீட்டுப் பிரிவினரால் அண்மையில் வெளியிடப்பட்ட ''காதோடு சொல்லி விடு'' என்னும் நூலில் மனதைத்தொடுகின்ற நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்ற இதயத்துடிப்புக்களே இந்த எழுத்துக்கள் எனக் கூறும் முன்னுரையுடன் மேஜர் பாரதியின் ஆக்கங்கள் பலவும் தொகுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேஜர் பாரதி பற்றிய ஒரு அன்னையின் நினைவும் இடம் பெற்றுள்ளது

''காப்பகழி ஒன்றில்
எழுகின்ற
உணர்வு அலைகளை
குறிப்பெடுத்துக் கொள்!''

என்று என் இனிய தேசமே என்ற கவிதையில் தொடங்கும் பாரதி.

''வைகறையை
வரவேற்பதற்காக
வரலாற்றுக் கடமை
அழைப்பு விடுத்ததை
அடுத்து
காணாமல் போன
உன் அன்பு மகளின்
உள்ளத்து உணர்வுகள்''

என்று அன்பான அம்மாவுக்கு கூறுவது வரையில் கவிதைகளாகவே விரிந்து செல்கின்றது.

இந்தக்கவிதைகளை அடுத்து 'கபடன் அக்கினோ'என்னும் பெண்போராளி பற்றியமேஜர் பாரதியின் நினைவுக் குறிப்பும், களத்தில் கலைஞர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பது பற்றிய விளக்க

**மேஜர் பாரதியின்**
**காதோடுசொல்லிவிடு**
**ஒரு பார்வை**

மும், களத்திலிருந்து ஒரு கடிதம் என்ற பெயரில் மலையகத் தோழிக்கு எழுதிய கடிதமும், வெள்ளையம்மா என்ற சிறுகதையுமாக விரிந்து இத் தொகுப்பில் இடம் பிடித்துள்ளன.

கவிதைகளில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் மேஜர் பாரதி.

''இருண்டு போயிருக்கும்
என் தேசத்தில்
ஏற்றப்படும்
விடுதலைத் தீபத்துக்கு,
என் உயிரும்,
எண்ணெயாய்
ஊற்றப்பட வேண்டும்''

என்ற தனது சத்தியமான ஆசையை சுட்டிக் காட்டியிருக்கும் போது.

துப்பாக்கி தாங்கியபோராளியாக எழுந்து நிற்கின்றார். இத்தகைய வார்த்தைகளை வடிப்பதற்கு இலக்கியப் புலமையும், இலக்கண அறிவும் மட்டும் துணைசெய்யாது என்பது வெள்ளிடை மலை. சத்தியமான உணர்வுகளிலிருந்து தான் இத்தகையநித்தியமான வார்த்தைகள் பிறப்பெடுக்க முடியும். அதனால் தான் தமிழீழ வரைபடம் மாவீரர் குருதியால் வரையப்படும் என்று அவள் குறித்துக் காட்டுகின்றாள். இந்த உறுதியே,

''விதை விழுந்து
முளையாகிச் செடியாகும்
அப்போது
தளிர் துளிர்த்து
மீண்டும்
புது மலர்கள் புஷ்பிக்கும்
அம் மலர்கள் நாளை
அன்னை விலங்கொடிக்கும்'

என்று நம்பிக்கையோடு எதிர்நோக்குவதற்கு வழி சமைக்கின்றது.

இத்தகைய உள்ளம் வெளிநாட்டு வாழ்வை விரும்பாமல் போவதில் வியப்பொன்றுமில்லை தேசத்தின் வாழ்வில் என்று தொடங்கும் கவிதை எங்கள் மண்ணில் இயல்பான நிகழ்வாகிப் போய்விட்ட பார்சலில் பாவையரை அனுப்பும் விடயத்தைக் குத்திக்காட்டுகின்றாள் தேசத்தை மறந்து — தேசத்திற்கான தமது கடமைமை மறந்து பனி படர்ந்த தெருக்களில் பைன் மரத்து நிழல்களில் ஓய்வெடுத்துக் கொள்ளும் காளையரை நோக்கி குற்றப் பத்திரம் தாக்கல் செய்கின்றாள். இரவல் காரையும், இயந்திர வாழ்வையும் எண்ணி வாடகைக் காற்றேவசதியென சுகிக்கும் இத்தகையோர் தங்கள் குழந்தைகளின் குரல்வளைகள் இந்நாடுகளில் நெரிக்கப்படும் காலம்எதிர்வரும்என்றுஉணர்ந்து கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கை செய்கின்றாள்.

இவ்வாறு அவள் வடித்துச் செல்லும் கவிதைகளில் அவளது எழுத்துக்களில் சத்தியத்தின் தரிசனமும் போராட்டத்தின் மீது கொண்ட உறுதியான பற்றும் இலட்சியத்தல் வெற்றியில் கொண்ட அசையாத நம்பிக்கையும் பட்டெனப் பளிச்சிடுகின்றது அதனால் இந்நூல் படித்துச் சுவைப்பதற்கு என்பதை விடவும் செயலுக்கு உந்தும் சக்திமிக்க எழுத்துக்களின் தொகுப்பு என்று கூறுவது மிகப்பொருத்தமானதாகும்.

- இளையவன்

சிறுகதை

# யாருக்காக?

க. சிவராசா

பின்னால் பட்... பட்.. என ஓய்வு இல்லாமல் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருந்தன இடையிடையே காது செவிடாகும் படி எறிகணைகள் விழுந்து வெடித்தன,

மக்கள் கூட்டம், கூட்டமாக பரந்த வயல் வெளிகளில் மேற்கு நோக்கி ஓடிக் கொண்டிருந்தனர்.

''...வர, வர வெடிச்சத்தம் கிட்டக் கேக்குது ... ஆமிக்காரன் எங்கடை ஊருக்கை வந்திட்டான் போல கிடக்குது ... ஓடுங்கோ ... ஓடுங்கோ...'' சைக்கிளில் சென்றவர்கள் சொல்லிக் கொண்டு வேகமாகப் போனார்கள்,

இதுவரையும் கடற்கரைப் பக்கமாக சுற்றிக் கொண்டிருந்த 'கெலி' வயல் வெளிகளுக்கு மேலே வட்டமடித்தது.

''...அறுவான் சுடப்போறான் போல பனைக்குள் ஓடுங்கோ... தம்பி ராசனையும் இழுத்துக்கொண்டு செல்வி பனைக் கூடலுக்குள் ஓடினாள் அவளைத் தொடர்ந்து தகப்பன் கிருஷ்ணனும்; தாய் பாக்கியமும் பனைக்கொருவராக 'கவர்' எடுத்துக் கொண்டனர்.

'கெலி' அவர்களைக் கடந்து தெற்கு நோக்கி விரைந்து கெதியாய் வாருங்கோ...'' சொல்லிக்கொண்டே தன்னுடையதும் செல்வியினுடையதும் புத்தகங்கள் கட்டிய உரப் பையை தலையில் வைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினான். ராசன் உப்பி ஊதிய பிரயாணப் பையை செல்வி தூக்கிக்கொண்டான் கிருஷ்ணனும், பாக்கியமும் சமையல் சாமான்கள் போட்டுக்கட்டிய பைகளைத் தூக்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினர். பின்னால் வெடிச்சத்தம் நெருங்கிக் கொண்டிருந்தது வரம்பு எது வயல் எது எனத் தெரியாமல் விழுந்து, எழுந்து ஓடிக் கொண்டிருந்தனர்

''...படார்...'' ஐயோ... ஐயோ பாக்கியமும் செல்வியும் சேர்ந்து கத்தினார்கள் கண்களைக் கூச வைத்து காதுகளைச் செவிடாக்கியது வெடிச்சத்தம் வயற்புழுதி ஒன்றையும் தெரியவிடாமல் சூழ்ந்து கொண்டது. வெடி மருந்தின் நாற்றம் மூக்கைத் திணறச் செய்தது.

''... அம்மா ... அம்மா ...'' ராசனின் தீனமான குரல் கேட்டது.

''... ஐயோ ... அம்மா.. தம்பிக்கு செல்பட்டுப் போட்டுது ...' கத்தினாள் செல்வி.

''... என்ரை ராசா ... என்ரை ராசா...'' ராசனைக் கட்டிக் கொண்டு புரண்டாள் பாக்கியம் செய்வதறியாது திகைத்து நின்றார் கிருஷ்ணன்

ஆவேசம் கொண்ட புழுதி மெல்ல மெல்ல அடங்கியது. கொண்டுவந்த பொருட்களை வீசி விட்டு மக்கள் தறிகெட்டு ஓடிக்கொண்டிருந்தனர். யாரும் பக்கத்தில் இல்லை...... ராசனின் வயிற்றிலிருந்து பெருவாரியாக இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. செல்வியின் முதற் சிச்சை அறிவு விழிப்புப் பெற்றது உடனடியாக இரத்தப் பெருக்கை நிற்பாட்ட வேண்டும்.

''.. ஐயா... உங்கடை சால்வையைத் தாருங்கோ...'' சால்வையால் வயிற்றைச் சுற்றி பலமாகக் கட்டிக் கொண்டாள். இரத்தம் சால்வையையும் மீறிக் கொப்பளித்தது.

''...அம்மா! தம்பியை ஆட்டாமல் அசையாமல் கெதியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக வேணும்.

''...ஐயோ! நான் என்ன செய்வன்... என்ரை ராசா...'' ஒப்பாரி வைக்கத் [illegible]

விட்டு, ராசனைத் தூக்கி தோளில் கிடத்திக்கொண்டார் கிருஷ்ணன் ...... வேகமாக நடக்கத் தொடங்கினார். அவர் பின்னால் பாக்கியமும் செல்வியும் ஓடத் தொடங்கினர்.

'...பதினான்கு வயது ராசன் என்ன மாய்க் கனக்கிறான்' மூச்சிரைத்தது கிருஷ்ணனுக்கு.

''...ஐயா அந்தப் பிள்ளையார் கோவிலிலை தம்பியைப் படுக்கவைப்பம்' ..ஏதாவது வாகனம் வருதோ எண்டு பார்ப்பம்...' மகள் சொன்னபடி கோவிலுக்குள் சென்றார் கிருஷ்ணன்.

''மெல்ல மெல்ல '' பாக்கியமும், செல்வியும் ராசனை இறக்கிப் படுக்க வைத்தனர்.

''...அம்மா... தண்ணி ... தண்ணி ... ராசன் முனகினான். கிருஷ்ணன் தண்ணீர் தேடி ஓடினார்.

ராசனின் விழிகள் செருகிக் கொண்டன...இதழ்கள் அசைந்தன ... ஆனால் சத்தம் வரவில்லை ..எதற்காகவோ தூக்கிய கை பொத்தென விழுந்தது.

''...அம்மா! தம்பியைப் பாரம்மா... பதறினாள் செல்வி.

''...என்ரை ராசா போய்விட்டியே .. பாக்கியத்தின் ஓலத்தால் கோவில் மண்டபம் அதிர்ந்தது.

பிள்ளையார் கோவிலில் கிடந்த மண் புழுதியை கண்ணீரால் தணித்துக் கொண்டிருந்த தாயை... செல்வி அமைதிப் படுத்திக்கொண்டிருந்தாள்.

ராஜனை...இல்லை...இல்லை பிணத்தைக் கொண்டு போக லன்ட் மாஸ்ரருக்கு ஓடித்திரிந்த கிருஷ்ணன், கால் ஓய்ந்து மனம் சலித்து திரும்பி வந்தார்.

''...சவத்தை ஏத்த ஒருத்தரும் சம்மதிக்கிறார்கள் இல்லை......அலுத்துக் கொண்டார் கிருஷ்ணர்.

ஒழுங்கையால் மோட்டார் சைக்கிள் வரும் சத்தம் கேட்டது. ''...அம்மா ...அம்மா... ஓடி வாணை எங்கடை விதானையார் வாறார்...'' செல்வி அவசரமாக அழைத்தாள்.

கோவில் வாசலில் விதானையாரது மோட்டார் சைக்கிள் வந்து நின்றது. விதானையாருக்குக் கண்ணீரும், ஒப்பாரியுமாகச் சொல்லி முடித்தாள் பாக்கியம். ''.. இப்ப என்ன செய்யப் போறியள்...'' அவசரப்பட்டார் விதானையார். ''...ஐயா லான் மாஸ்டருக்கு அலைஞ்சு திரிஞ்சன் ஒருத்தரும் வரமாட்டன் என்கிறாங்கள்... ஒரு லான்மாஸ்டர் ஒழுங்கு பண்ணித் தாருங்கோ; சவத்தைக் கொண்டு போக வேணும்...'' கிருஷ்ணன் கேட்டார்.

'' வரமாட்டான் என்டு சொல்லுகிறவன்களை நான் என்ன செய்ய..''

''.. ஐயா! இந்த இடம் உங்களுடைய இடம் தானே... ஒரு வண்டியாவது ஒழுங்கு பண்ணித் தாருங்கோ...'' கெஞ்சினாள் பாக்கியம். ''...ஆரிட்டை வண்டில் நிக்குது என்று பதிஞ்சே வைத்திருக்கிறன்...'' சினந்தார் விதானையார்.

''...தம்பியையும் வைத்துக் கொண்டு ஐயா பின்னுக்கு இருப்பர், மாமி வீட்டிலை கொண்டு போய் இறக்கி விடுங்கோ...'' மன்றாடினாள் செல்வி.

'' [illegible]

உதைத்தார் மோட்டார் சைக்கிள் சீறிக் கொண்டு கிளம்பியது

''பிள்ளை இனித் தாமதிக்க ஏலாது .. நான் தூக்கிக் கொண்டு போறன் ..'' மகனின் சடலத்தைத் தூக்கித் தோளில் சாய்த்தபடி நடக்கத் தொடங்கினார் கிருஷ்ணன். பாக்கியமும் செல்வியும் அழுதபடி பின்னால் சென்றனர்.

★ ★ ★

யாரோ விட்டுச் சென்ற அகதி முகாம் கொட்டில் முற்றத்தில் இருந்தபடி பாக்கியம் யோசித்துக் கொண்டிருந்தாள்.

எல்லாம் முடிஞ்சுது... ராசனைப் பிள்ளையாக நித்திரையால் எழுப்பியதும்... பிள்ளையார் கோவிலில் சவமாகக் கிடத்தியதும்... முன் பின் தெரியாத இரவல் சுடலையில் தீயாசப் பொசுக்கியதும்... எல்லாம் முடிஞ்சுது. ''... என்னம்மா தம்பி செத்ததிற்கு டெட் சேட்டிக்கற் எடுக்க வேணும் எண்டு கதைச்சினம், அந்த அலுவலைப் பாருங்கோவன்... ராசனின் மரணச் சடங்கிற்கு வந்தவர்கள் அதைத்தான் சொன்னார்கள்...'' பிறகு பிறகு நிண்டு கஷ்டப் படாமல் விதானையாரைப் பிடிச்சு உடனை டெட் சேட்டிக்கற்றை எடுத்துப் போடுங்கோ '' அதனைத்தான் செல்வி நினைவு படுத்தினாள்.

''பிள்ளையைப் பறிகுடுத்து நாலு நாள் ஆகவில்லை, றோட்டிலை எப்படிப் பிள்ளை போறது...''

''...அதையெல்லாம் பார்க்க ஏலாது அம்மா... நானும் வாறன் இரண்டு பேருமாகப் போவம்...'' செல்வியும் புறப்பட்டாள்.

விதானையாரைத் தேடி ஒழுங்கை ஒழுங்கையாகச் சுற்றினார்கள். வீட்டை விட்டு ஓடிவந்த பின் சரியான சாப்பாடு இல்லாததால் செல்விக்கு கால்கள் பின்னலிட்டன

'இந்த அம்மா எப்படித்தான் இவைகளைத்தாங்கிக் கொண்டு நடக்கிறாளோ மனதுக்குள் ஆச்சரியப்பட்டாள் செல்வி.

படலையைத்தட்டி ஒரு செம்பு தண்ணீர் வாங்கி குடித்து வயிற்றை நிரப்பிக் கொண்டு விதானையாரை விசாரித்தார்கள் ... ''அடுத்த வீடுதான் ...'' ஆறுதலடைந்தார்கள்.

... எட்ப உங்கடை பெடியன் செத்தவன் ... ? '' விதானையார் ஒன்றும் தெரியாதவர் போல் கேட்டார்..

''. பிள்ளையார் கோவிலிலே ... ஐயாவை மறிச்சதை மறந்து போனியளோ ... ? '' வாயுக்குள் சேலைத் தலைப்பை வைத்தபடி கேளினாள் பாக்கியம்.

'' ... டெட் சேட்டிபிக்கற்றுக்குஇப்ப என்ன அவசரம்?'' ... 'ஏழைகளின் அவசரம் புரியாத மக்கள் சேவையாளன்...' மனதுக்குள் குமுறிக்கொண்டு செல்வி சொன்னாள் ''... ஐயா.! நட்ட ஈடு [illegible]

'' ... ஓ ...நாற்பது ... ஐம்பது கிடைக்கு மெண்டு ஆரோ ஆசை காட்டிப் போட்டினம் ... பாக்கியம் ஆஸ்பத்திரி சேட்டிபிக்கற் வைச்சிருக்கிறியே ... ? ''

பாக்கியமும் செல்வியும் சேர்ந்து அதிர்ந்தார்கள் செல்வி தான் கேட்டாள் ... ஐயா.! தம்பி செல்பட்டு பத்து நிமிசத்திலை செத்துப் போனான் ... செத்தாப் பிறகு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் என்ன பிரயோசனம் ...''

''... பாக்கியம் இஞ்சை ஒண்டும் செய்ய ஏலாது ... நாளைக்கு ஏ ஜி ஏ கந்தோருக்கு வா...பெரிய ஐயாவோடை கதைச்சு எடுத்துத்தாறன்...சரிபோங்கோ ...'' விதானையார்கதவைமூடிக்கொண்டு உள்ளே போனார்.

விதானையார் சொன்ன மறு நாளும் கடந்து பல நாட்களும் கடந்து விட்டன. பாக்கியமும் செல்வியும் மாறி மாறி அலைந்து திரிந்தாயிற்று. இன்னும் 'டெட்சேட்டிக்கற்' வரவில்லைவிதானையாரும் இவர்களுக்கு விளங்காத புது புதுக் காரணங்களைக் கூறிக்கொண்டே இருந்தார்.

பாக்கியம் நிவாரண மட்டையையும் குடும்ப அட்டையையும் கடதாசிப் பைக்குள் போட்டபடி புறப்பட்டாள் ''... அம்மா! பழஞ்சோறு கொஞ்சம் கிடக்கு திண்டிட்டுப்போவன் ..விதானையாரைக் கண்டுபிடிச்சு திரும்பி வர பொழுது பட்டுட்போம் போனமுறையும் ஐயனார் கோயிலடியிலை மயங்கி விழுந்திட்டாய் ... வெறுவயித்தோடை போகாதை...''

''...வேண்டாம் பிள்ளை! கிடக்கிறதை சாப்பிட்டிட்டு... கொஞ்சத்தை கொய்யாவுக்கும் குடு... எனக்கு பாக்கு வெத்திலை கிடக்கு... நான் வாறன்...''

''...அலைஞ்சு அலைஞ்சு எங்களைச் சாகடிக்க வேண்டாமெண்டு விதானையாரிட்ட சொல்லம்மா...'' தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கினாள் பாக்கியம்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கூட்டம் நிரம்பி வழிந்தது. ஒவ்வொரு கிராம சேவையாளரையும் சுற்றி ஒரு கும்பல் நின்றது. பாக்கியம் ஒவ்வொரு கும்பலாகப் பார்த்துக் கொண்டு வந்தாள்... எங்கடை விதானையாரைக் காணவில்லை... திரும்பத் திரும்பச் சுற்றி வந்தாள்... வாசலில் நின்று அதிகாரம் செய்த ஏவலாளியைக் கேட்டாள்...

இன்னும் வரவில்லையாம் ... வருவாராம்... கிழுவை மர நிழலில் ஒதுங்கிக் கொண்டு வெற்றிலைக் கடதாசியைப் பிரித்தாள்.

பாக்கியம் வாசல் பக்கத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். ''எல்லா விதானையும் வருகினம்... எங்கடை விதானையைத்தான் காணவில்லை...'' சலித்துக் கொண்டாள்.

சூரியன் எந்தவித தடையும் இல்லாமல் பூமியை நோக்கி வெய்யிலை எறிந்தபடி உச்சிக்கு ஏறிக்கொண்டிருந்தான். முகத்தில் வழிந்த வியர்வையை சேலைத் தலைப்பால்துடைத்துக் கொண்டாள். கண்களை ஏதோ புகாராக மறைத்த மாதிரித் தெரிந்தது. கையால் கசக்கிக் கொண்டாள்.

'கிணற்றடியிலை போய் கொஞ்சம் தண்ணி குடிச்சிட்டு... முகத்தையும் கழுவிக் கொண்டாள். குளிர்ந்த நீர் முகத்தில் பட்டவுடன் தென்பு ஏற்பட்டது. அந்தத் தென்புடன் வந்து கிழுவை மரத்தின் கீழ் இருந்து கொண்டாள். கூட்டம் சிறிது சிறிதாக கலைந்து கொண்டிருந்தது, வந்திருந்த கிராமசேவையாளர்களும் சைக்கிள்களில் ஏறி விரைந்தனர். சூரியன் உச்சியைத் தாண்டி பள்ளத்தில் கிடு கிடுவென சரியத் தொடங்கினான்.

''...ஆச்சி நீ ஏன் இருக்கிறாய்...'' ஏவலாளி இப்போதுதான் பாக்கியத்தைத் பார்த்தமாதிரிக் கேட்டான்.

''எங்கடை :விதானையார் இன்னும் வரவில்லைத் தம்பி...''

''உங்கடை விதானையார் இண்டைக்கு வரமாட்டார் ... அவற்றை பிள்ளைக்கு... பிறந்தநாள் .. அவர் வீடியோ எடுக்கிற அலுவலிலை ஓடித்திரிகிறார்... மற்ற விதானை மாரும் அங்கைதான் போயினம்... நீ நாளைக்கு வாணை ..'' கதவை மூடி திறாங்கை பெருவிரலில் நின்று கொழுவினான். கன்னத்தால் வழிந்து வாய்க்குள் சென்ற வியர்வை உப்புக் கரித்ததால்... த்தூ... என்று தூரத் துப்பிக் கொண்டாள் பாக்கியம்.

...பிள்ளை... பொழுது பட்டுப் போச்சு விளக்குக் கொழுத்தாமல் முகட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய் எழும்பு பிள்ளை...'' சொல்லிக் கொண்டே, வாளியைத் தூக்கிக்கொண்டு கிணற்றடிக்குப் போனாள் பாக்கியம். தாயின் குரல் காதில் விழாத மாதிரி முகட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள் செல்வி தன்னைச் சூழ இருள் திரண்ட போதும் விளக்கு ஏற்ற வேண்டும் என்ற நினைவில்லாமல் யோசித்துக் கொண்டிருந்தாள்.

...இப்ப நடக்கிற சண்டை ஆருக்காக... எத்தனை உயிர் இழப்பு... பொருளிழப்பு இவையெல்லாம் என்னத்திற்காக... இந்தக் கஷ்ட காலத்திலும் .. சேவையை சேவை மாதிரிச் செய்யமாட்டாதவங்கள்... நாளைக்கு சுதந்திரம் கிடைச்ச பின்னும் தங்களுக்கு ஏத்த மாதிரி வசதிகளைச் செய்து கொண்டு... ஏழைகளிலை குதிரை விடத்தான் போறான்கள்... ச்சீ...

தண்ணீர் வாளியை முற்றத்தில் வைத்து விட்டு, குடிசைக்குள் குனிந்த பாக்கியம்; செல்வி இன்னும் முகட்டையே பார்த்தபடி யோசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, தானே பஞ்சு விளக்கை எடுத்துக் கொண்டு, தீப்பெட்டியைத் தேடினாள்.

''......அம்மா! ஆமிக்காரனோ, சிங்களவனோ, மட்டும் எங்கடை எதிரியில்லை... எங்களுக்குள்ளேயே இருந்து கொண்டு எங்களை நாளாந்தம் சாகடிக்கிற எதிரிகளுக்கு முதலில் தண்டனை வழங்க வேண்டும்...மகள்சொல்வது எதுவும் புரியாமல்இருட்டில் செல்வியின்முகத்தைத்தேடியபடிதீப்பெட்டியைஉரசினாள்

..பக்... என பஞ்சு விளக்கு பத்திக் கொண்டு பெரிதாக எரிய... ஊ... ஊ .. என ஊதி அணைக்க முனைந்தாள் பாக்கியம்.

''...இஞ்சை விடம்மா...'' செல்வி

"... என்ரை ராசா ... என்ரை ராசா..." ராசனைக் கட்டிக் கொண்டு புரண்டாள் பாக்கியம் செய்வதறியாது திகைத்து நின்றார் கிருஷ்ணன்

ஆவேசம் கொண்ட புழுதி மெல்ல மெல்ல அடங்கியது. கொண்டுவந்த பொருட்களை வீசி விட்டு மக்கள் தறிகெட்டு ஓடிக்கொண்டிருந்தனர். யாரும் பக்கத்தில் இல்லை...... ராசனின் வயிற்றிலிருந்து பெருவாரியாக இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. செல்வியின் முதற் சிகிச்சை அறிவு விழிப்புப் பெற்றது உடனடியாக இரத்தப் பெருக்கை நிற்பாட்ட வேண்டும்.

"... ஐயா... உங்கடை சால்வையைத் தாருங்கோ..." சால்வையால் வயிற்றைச் சுற்றி பலமாகக் கட்டிக் கொண்டாள். இரத்தம் சால்வையையும் மீறிக் கொப்பளித்தது.

"...அம்மா! தம்பியை ஆட்டாமல் அசையாமல் கெதியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக வேணும்.

"...ஐயோ! நான் என்ன செய்வன்... என்ரை ராசா..." ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள் பாக்கியம்

பாக்கியத்தை பக்கவாட்டில் தள்ளி

கோவிலே வாசலில் விதானையாரது மோட்டார் சைக்கிள் வந்து நின்றது. விதானையாருக்குக் கண்ணீரும், ஒப்பாரியுமாகச் சொல்லி முடித்தாள் பாக்கியம். "... இப்ப என்ன செய்யப் போறியள்..." அவசரப்பட்டார் விதானையார். "...ஐயா லான் மாஸ்டருக்கு அலைஞ்சு திரிஞ்சன் ஒருத்தரும் வரமாட்டன் என்கிறாங்கள்... ஒரு லான்மாஸ்டர் ஒழுங்கு பண்ணித் தாருங்கோ; சவத்தைக் கொண்டு போக வேணும்..." கிருஷ்ணன் கேட்டார்.

" வரமாட்டான் என்டு சொல்லுகிறவன்களை நான் என்ன செய்ய.."

"..ஐயா! இந்த இடம் உங்களுடைய இடம் தானே... ஒரு வண்டியாவது ஒழுங்கு பண்ணித் தாருங்கோ..." கெஞ்சினாள் பாக்கியம். "...ஆரிட்டை வண்டில் நிக்குது என்று பதிஞ்சே வைத்திருக்கிறன்..." சினந்தார் விதானையார்.

"...தம்பியையும் வைத்துக் கொண்டு ஐயா பின்னுக்கு இருப்பர், மாமி வீட்டிலை கொண்டு போய் இறக்கி விடுங்கோ..." மன்றாடினாள் செல்வி.

"...இது என்ன மோட்டைச் சயிக்கிலோ, சவ வண்டிலோ... விசர்கதை கதையாதேங்கோ..." கோபத்துடன் எழும்பி

விட்டு ஓடிவந்த பின் சரியான சாப்பாடு இல்லாததால் செல்விக்கு கால்கள் பின்னலிட்டன

'இந்த அம்மா எப்படித்தான் இவைகளைத்தாங்கிக் கொண்டு நடக்கிறாளோ மனதுக்குள் ஆச்சரியப்பட்டாள் செல்வி.

படலையைத்தட்டி ஒரு செம்பு தண்ணீர் வாங்கி குடித்து வயிற்றை நிரப்பிக் கொண்டு விதானையாரை விசாரித்தார்கள் ... "அடுத்த வீடுதான் ..." ஆறுதலடைந்தார்கள்.

... எப்ப உங்கடை பெடியன் செத்தவன் ... ?" விதானையார் ஒன்றும் தெரியாதவர் போல் கேட்டார்..

".. பிள்ளையார் கோவிலிலே ... ஐயாவை மறிச்சதை மறந்து போனியளோ ... ?" வாயுக்குள் சேலைத் தலைப்பை வைத்தபடி கேவினாள் பாக்கியம்.

" ... டெட் சேட்டிபிக்கற்றுக்குஇப்ப என்ன அவசரம்?" ... 'ஏழைகளின் அவசரம் புரியாத மக்கள் சேவையாளன்...' மனதுக்குள் குமுறிக்கொண்டு செல்வி சொன்னாள் "... ஐயா.! நட்ட ஈடுகள் எடுக்கிற நேரம் கஷ்டப்பட வேண்டி வருமாம் ... அதுதான் எடுத்து வைப்பம் எண்டு வந்தனாங்கள் ... "

## க. சிவராசா

இன்னும் வரவில்லையாம் ... வருவாராம்... கிழுவை மர நிழலில் ஒதுங்கிக் கொண்டு வெற்றிலைக் கடதாசியைப் பிரித்தாள்.

பாக்கியம் வாசல் பக்கத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். "எல்லா விதானையும் வருகினம்... எங்கடை விதானையைத்தான் காணவில்லை..." சலித்துக் கொண்டாள்.

சூரியன் எந்தவித தடையும் இல்லாமல் பூமியை நோக்கி வெய்யிலை எறிந்தபடி உச்சிக்கு ஏறிக்கொண்டிருந்தான். முகத்தில் வழிந்த வியர்வையை சேலைத் தலைப்பால்துடைத்துக் கொண்டாள். கண்களை ஏதோ புகாராக மறைத்த மாதிரித் தெரிந்தது. கையால் கசக்கிக் கொண்டாள்.

'கிணற்றடியிலை போய் கொஞ்சம் தண்ணி குடிச்சிட்டு... முகத்தையும் கழுவினால் சுகமாக இருக்கும்...' எண்ணியபடி எழுந்தாள். கால்கள் பின்னலிட்டன, கிழுவை மரத்தைப் பிடித்துக்

போறான்கள்... ச்சீ...

தண்ணீர் வாளியை முற்றத்தில் வைத்து விட்டு, குடிசைக்குள் குனிந்த பாக்கியம்; செல்வி இன்னும் முகட்டையே பார்த்தபடி யோசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, தானே பஞ்சு விளக்கை எடுத்துக் கொண்டு, தீப்பெட்டியைத் தேடினாள்.

"......அம்மா! ஆமிக்காரனோ, சிங்களவனோ, மட்டும் எங்கடை எதிரியில்லை... எங்களுக்குள்ளேயே இருந்து கொண்டு எங்களை நாளாந்தம் சாகடிக்கிற எதிரிகளுக்கு முதலில் தண்டனை வழங்க வேண்டும்...மகள்சொல்வது எதுவும் புரியாமல்இருட்டில் செல்வியின்முகத்தைத்தேடியபடிதீப்பெட்டியைஉரசினாள்

...பக்... என பஞ்சு விளக்கு பத்திக் கொண்டு பெரிதாக எரிய... ஊ... ஊ.. என ஊதி அணைக்க முனைந்தாள் பாக்கியம்.

"...இஞ்சை விடம்மா..." செல்வி பக்கத்தில் கிடந்த பலகைத் துண்டால் போத்தலின் வாயைப் 'பொத்'தென மூடினாள், ...தீ அணைந்தது ..

# செயற்கை நுண்ணறிவுக் கணனிகள் 21ம் நூற்றாண்டில் விற்பனைக்கு வரும்

"கணனி உலகம்" ஐந்தாவது தலைமுறையின் ஆரம்பப் படியில் இன்று நிற்கின்றது. அமெரிக்காவும், ஜப்பானும் ஐந்தாவது தலைமுறைக் கணனியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றத்துடன் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐந்தாவது தலைமுறைக் கணனிகள் உலகவியாபார அரங்கில் விற்பனைக்கு வந்துவிடும் என அமெரிக்கா எதிர்பார்க்கின்றது. ஐந்தாவது தலைமுறை கணனிகள் என்றால் என்ன? என அறிவதற்கு கணனியின் வரலாற்றை அறிய வேண்டியது அவசியமாகிறது.

பிரான்சு நாட்டவரான பலசிபஸ்கால் என்பவர் இளம் வயதிலேயே விஞ்ஞான சிந்தனை உடையவர். ஆனால் அவரது சிந்தனைக்கும் ஆராய்ச்சிகளுக்கும் இடைஞ்சலாக தகப்பனாரின் தொழில் இருந்து வந்தது. அவரது தகப்பனார் பிரான்சு அரசாங்கத்தில் வரி அறவிடும் அலுவலராக இருந்தார். அவர் அறவிடும் வரி தொடர்பான கணக்குகள் அனைத்தையும் பஸ்காலே செய்து வந்தார். அதனால் பெருந் தொகையான இலக்கங்களை கூட்டுவது கழிப்பது என பெருமளவு வேலை பஸ்காலினுடையதாக இருந்தது. இது அவருக்குப் பெரும் நேரச் செலவுடையதாக இருந்தது. மட்டுமன்றி சலிப்பூட்டுவதாகவும் இருந்தது

இதற்குத் தீர்வு காண்பதற்கான பஸ்காலின் முயற்சி "எண்ணும் கருவி" (Counting mechine) ஒன்றை கண்டு பிடிக்கக் காரணமாயிருந்தது. பஸ்கால் தனது 18 ஆவது வயதில் இதனைக் கண்டுபிடித்தார். இதுவே முதலாவது பொறிமுறைக் கணனியாக இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கணனியின் வரலாறு மனிதன் கணிப்பு என்னும் செயற்பாட்டைத் தொடங்கியதிலிருந்து ஆரம்பமாகிறது எனக் கொண்டால் முதலாவது கணனியாக மனிதனின் இருகைகளிலுமுள்ள பத்துவிரல்களையும் கொள்ளலாம். எனினும் கி. மு. 5000 ஆண்டுகளில் உபயோகத்தில் இருந்ததாகக் கருதப்படும் ',அபகஸ்'' என அழைக்கப்படும் மணிச் சட்டமே முதலாவது கணிக்கும் கருவி என ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

சிறுவர்கள் எண்ணிப் பழகுவதற்கு உபயோகிக்கும் மணிச் சட்டம் போன்ற தோற்றத்தையுடைய இது இந்துக்களாலும். எகிப்தியராலும் சமகாலத்தில் உபயோகப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனினும் சிலர் இது பாபிலோனியரின் கண்டுபிடிப்பு எனக் கருதுகின்றனர்.

கி, பி. 12 ஆம் நூற்றாண்டில் சீனர்கள் இதனைச் சிறந்த முறையில் திருத்தி அமைத்தார்கள். இக்கருவி இன்றும் சீனா, ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளில் பாவனையில் உள்ளது.

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கில விஞ்ஞானியான சார்ள்ஸ் பபேஜ் என்பவர் நீராவி மூலம் இயங்கும் கணிப்பொறி ஒன்றை ஆக்குவதற்குத் தேவையான வரைபடங்களைத் தயாரித்திருந்தார். ஆனால் அக்காலத்திலிருந்த பொறிமுறைத் தொழில்நுட்பம் அக்கருவியை ஆக்குவதற்குப் போதுமானதாக இல்லை. பத்து வருடங்கள்

## வேலவன்

அயராது முயற்சி செய்தும் அவரால் வெற்றி பெற முடியவில்லை. ஆனால் அவரின் வரைபடங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டே நவீன கணனிகள் உருவமைக்கப்பட்டன. இதனால் அவர் "கணனிகளின் தந்தை" என அழைக்கப்படுகிறார்.

19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வளர்ந்துவரும் குடியேற்ற நாடாக விளங்கிய அமெரிக்காவின்சனத்தொகையைகணிப்பிடுவதில் ஏற்பட்ட காலதாமதம் மின் கணனிகளைக் கண்டுபிடிக்கத் தூண்டின. 1880 ஆம் ஆண்டில் பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு அமெரிக்காவின் சனத்தொகையைக் கண்டுபிடிக்க 1890 இல் தான் முடிந்தது.

எனவே இதனைத் துரிதமாக்க அமெரிக்க விஞ்ஞானிகள் முயன்றனர். இம் முயற்சியின் பயனாக ஹேர்மன் ஹோலித் என்பவரால் முதலாவது மின் கணிப்பொறி கண்டுபிடிக்கப்பட்டது. இதன்மூலம் சனத்தொகை கணிப்பீடு மூன்று வருடங்களில் செய்து முடிக்கப்பட்டது. 1896 ஆம் ஆண்டில் ஐ. பி. எம். [IBM] என்னும் நிறுவனம் இவரது கருவியைத் தொழில் ரீதியாகத் தயாரிக்கத் தொடங்கியது.

நவீன கணனிகளின் ஆரம்ப வரலாற்றில் 1937 ஆம் ஆண்டில் ஐ. பி. எம். நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட "மார்க்-1" எனும் கணனி குறிப்பிடத்தக்கது.

இந்த கணனி 8 அடி உயரம் 55 அங்குல நீளமுடையது இதனுடைய இரைச்சல் "ஒரு அறைநிறைந்த கிழவிகள் பின்னல் வேலை செய்து கொண்டு உரையாடும் போது" எழும் ஓசையைப் போன்றது என்று கூறப்படுகிறது. ஏழுலட்சத்து அறுபதாயிரம் பாகங்களும், 500 மைல் நீளமான மின் இணைப்பு கம்பிகளும் கொண்டது. இது அரை மணித்தியாலத்திற்கு தொழிற்படுமானால் மூன்று மணிநேரம் சூடு ஆறவிட்ட பின்பே மீண்டும் தொழிற்படும்.

நவீன கணனிகளின் வரலாறு ஐந்து தலைமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளது. இக்கணனிகளின் முதல் நான்கு தலைமுறைகளும் இதுவரை கூறப்பட்ட கணனிகளிலிருந்து வேறுபட்டவை இவை ஞாபகப்பகுதியை Memory Unit கொண்டவையாக அமைந்துள்ளன.

நவீன கணனிகள் பொதுவாக மூன்று பகுதிகளைக் கொண்டனவாக அமைக்கப்படுகின்றன முதலாவதாக கட்டளைகளையும் தரவுகளையும் உள்வாங்கும் பகுதி.இரண்டாவதாக கட்டளைகளை செயற்படுத்தி தரவுகளை பயனுள்ள தகவல்களாக மாற்றும் பகுதி. மூன்றாவதாக தகவல்களை வெளித்தரும் பகுதி. இங்கு கட்டளைகளை "ஞாபகத்தில்" வைத்திருந்து செயற்படுத்துதல் என்பது முக்கிய அம்சமாகும் இவ்வாறு ஞாபகப்பகுதியை கொண்டவையாக இக்கணனிகள் அமைகின்றன அதாவது இக் கணனிகள் நிகழ்ச்சித் திட்டங்களைச் Program செயற்படுத்தக் கூடியன.

முதலாம் தலைமுறைக் கணனிகள் வால்வுகள் எனப்படும் வெற்றிடக் குளாய்களால் (Vaccume tubes) ஆக்கப்பட்டவை 1946-1959 ஆண்டு காலப்பகுதியில் உபயோகத்தில் இருந்தன.

பின்னர் 1959 - 65 காலப் பகுதியில் இரண்டாம் தலைமுறையில் ரான்சிஸ்டர் (Transistors) உபயோகிக்கப்பட்டன. பின்னர் மூன்றாம்தலைமுறையில் ஐ. சி (I.C) எனப்படும் தொகுப்பு மின்சுற்றுகளும் (Integrated Circuits) பின்னர் நான்காம் தலைமுறையில் நுண்சுற்றுக்களும் (Micros) பயன்படுத்தப்பட்டு கணனிகள் தயாரிக்கப்பட்டன. இன்றுநான்காம் தலைமுறைக் கணனிகளே அதிகம் பாவனையில் காணப்படுகின்றன.

இந்நான்கு தலைமுறைகளும் இலத்திரனியல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியோடு இணைந்தவையாக உள்ளன. இக்கணனிகள் வரவர சிறியவையாகவும்,வேகமான, திருத்தமான செயற்பாடுகளை கொண்டனவாகவும் இலகுவாக கையாளக் கூடியனவாகவும் மலிவானவையாகவும் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சங்கள் ஆகும். ஆனால் அடிப்படைச் செயற்பாடுகளில் பெரிய மாற்றங்களை கொண்டிருக்கவில்லை.

ஆனால் ஐந்தாம் தலைமுறைக் கணனிகள் கண்டுபிடிக்கப்பட்டால் நிச்சயமாக அதனை ஒரு புதுயுகம் என்றே சொல்லாம். ஏனெனில் மேற்குறிப்பிட்ட நான்கு தலைமுறைக் கணனிகளும் தமக்கு வழங்கப்பட்ட கட்டளையை அல்லது நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்த மட்டுமே தெரிந்தவையாகும். மனித

(5ஆப் பக்கம் பார்க்க)

## இவ்வார அறிமுகம்

### நங்கூரம்

சமூக அறிவியல் ஏடு என்ற முத்திரையுடன், நங்கூரம் மாதாந்த சஞ்சிகையாக வெளிவரத் தொடங்கியுள்ளது. புதிய கண்டுபிடிப்புக்கள், கங்காரு, பற்றிய அறிமுகம், சோதனைக்குழாய்த் தாவரங்கள், நவக்கிரகங்கள் பற்றிய கட்டுரை மற்றும் பயன் மிக்க தகவல் களஞ்சியமாக வெளிவந்திருக்கும் நங்கூரம் தொடர்ந்தும் மாதாந்தம் வெளிவரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. காலம் எமக்காகக் காத்திருக்கப் போவதில்லை. அதுபோலவே காலம்மாறும்வரை காத்திருப்பதற்கு நாம் மார்க் கண்டேயர் களுமல்ல என்று ஆசிரியர் தலையங்கத்தில் அடித்துக் கூறும் நங்கூரம் தேசநலனை மதிக்காத கல்வியை தூக்கி எறிந்து மதித்துத் துவைப்போம் என நடுப்பக்கத்தில் அறைகூவல் விடுகின்றது.கொந்தளித்துக் கொண்டிருக்கும் சமூகம் என்னும் கடலில் சீறிவரும் அலைபோன்ற சிங்களத்தின் படையெடுப்பு மிரட்டல்களுக்கு இடையில் நங்கூரம் பாய்ச்சப்படத்தொடங்கியிருக்கிறது தொடர்புகளுக்கு நங்கூரம், அரசடி வீதி கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

# முதன்மை பெறவேண்டிய தமிழ்தேசிய உணர்வு

தேசியம் என்பது சமூக வாழ்வின் உன்னதமான அம்சங்களில் ஒன்று இதனால் தேசிய உருவாக்கம், தேசிய வளர்ச்சி என்பன முன்னுரிமைக்கு உரியவையாகின்றன. தேசியம் எல்லா வகையிலும் மனிதனை ஒன்று திரட்டிவிடுகின்றது. அரசியற் சமூகரீதியில் எல்லா மனிதர்களையும் சமத்துவமாக்கி விடுகின்றது. தேசியம் என்பது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் கோஷங்களை முன்னெடுக்கின்றது. இத்தகைய உள்ளடக்கத்தினால் தான் தேசியமென்பது உன்னதமானதாக கருதப்படுகின்றது.

இத்தகைய தேசிய உருவாக்கத்தினை ஒருசமூகமானது பல்பரிமான வளர்ச்சிக் கூடாகவே அடையலாம் இது ஒரு நீண்ட வளர்ச்சிப் பாதையைக்கொண்டதும் புரட்சிகரமானதும் ஆகும். யூதர்கள் மிகப்பெரும் இன அழிவின் பின்பே யூத தேசிய உருவாக்கத்தில் ஈடுபடலாயினர். ஐரிஸ் காரரும் தேசிய இன உருவாக்கத்தை ஏற்படுத்தப் பெரும்பாடுபட்டனர். யூதர்களினதும், ஐரிஸ் காரர்களினதும் தேசிய இன அங்க அடையாளங்கள் பல அழிக்கப்பட்ட நிலையில்நவீன தேசிய இனத்திற்குரிய பல புதிய அம்சங்களை எல்லாம் அவர்கள் திட்டமிட்டு உருவாக்க வேண்டி இருந்தது.

இதேபோல பல்வேறு நாடுகளினதும், இனங்களினதும் தேசிய உருவாக்கங்களின் போது அவற்றின் முன்னோடிகள் பெரும் துயரங்களையும் இரத்தம் தோய்ந்த வாழ்வையும் அனுபவிக்க வேண்டி இருந்தது எல்லாத் தேசங்களினதும் தேசிய உருவாக்கத்தில் சிந்தனையாளர்கள் (புத்திஜீவிகள்) முதலடி எடுத்துவைத்துத் துயரத்தின் முதல் அடியைத் தம் முகத்தில் வாங்கிக் கொள்கின்றனர் பிரான்சில் ரூஷோ, வல்டயர், மொண்டஸ்கியூ போன்றோரையும், ரஷ்யாவில் ரோல்ஸ்ரோயையும், இந்தியாவில் ஓரளவிற்கு மோகன்றோயையும் இதற்கு உதாரணமாய்க் காட்டலாம். கலை, இலக்கியம், பொருளாதாரம், பண்பாடு போன்ற பல்வேறு அம்சங்கள் சார்ந்த சிந்தனைகளும் செயற்பாடுக

இத்தகைய பின்னணியில் வைத்து ஈழத்தமிழ் தேசிய உருவாக்கத்தையும் வளர்ச்சியையும் பற்றிச் சிந்திக்கவேண்டியது அவசியமாகும். முழு இலங்கை தழுவிய ''தேசிய'' மாயைக்குள் பொதுவாகத் தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ்ப் புத்திஜீவிகளும் தமிழ்க் கலைஞர்களும் இலக்கியவாதிகளும் நீண்டகாலமாகவே பெரிதும் சிக்குண்டிருந்தனர் எனலாம் பல கட்டங்களில் நேர்க்கணியமான உபதேசிய வளர்ச்சியை உருவாக்கக்கூட மேற்குறிப்பிட்ட தரப்பினர் முயலவில்லை எனலாம்.

தமிழ்த்தேசியம் நேர்க்கணிய வளர்ச்சியை அடைவதற்குப் பதிலாக சிங்களப் பௌத்த பாதிப்பிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்வதற்குரிய வகையில் அரசியல் ரீதியான தற்காப்புத் தேசிய நிலையினை நிலைநிறுத்திக் கொள்ளவே முற்பட்டது இதனால் அரசியல் அர்த்தத்தில் தற்காப்பை அடிப்படையாகக் கொண்டதாகவே தமிழ்த்தேசியம் உருப்பெற வேண்டியதாயிற்று.

''சுதந்திரத்தின்'' பின்பு உபதேசிய அடிப்படையில் அரசியல் அர்த்தத்திலான தமிழ்த் தலைமை உருப்பெற்றிருந்த போதிலும் சமூக, பொருளாதார கலை இலக்கிய சிந்தனை அர்த்தத்தில் அது போதியளவு உருப்பெறவில்லை முழுமைப்பட்ட தமிழ்த் தேசிய அர்த்தத்திற் கூறமுடியாததாயினும் மொழி உணர்வை வெளிப்படுத்தும் வகையிலும், கலை, இலக்கியத் துறைகளிலும் ஒரு சில தமிழ்ப் புத்திஜீவிகள் அடியெடுத்து வைத்திருந்தனர். இந்த வகையில் காலம் சென்றவர்களான பேராசிரியர். சு. வித்தியானந்தன், வண. தனிநாயகம் அடிகளார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆனால் பொதுவான புத்திஜீவிகளின் போக்கு தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்தும் வகையதாய் அமையவில்லை. பெருமளவுக்கு முழு இலங்கை தழுவிய தேசியச் சிந்தனையே; வலதுசாரி, இடது சாரிச் சிந்தனையாளர்களிடம் காணப்பட்டது, குறிப்பாக கலை,

பல்கலைக் கழகங்களை மையமாகக் கொண்ட மாக்ஸிஸ ''பண்டிதர்கள்'' இலங்கை தழுவிய தேசியத்தைப் பிரதிபலித்தவர்களாக மட்டுமன்றித் தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்களாயும் காணப்பட்டனர். இலக்கியத் துறையில் இந்திய மூன்றாம்தர இலக்கியங்களுக்கு எதிராகவே ஈழத்து இலக்கியம் என்ற ஒன்றை வளர்ப்பதில் இவர்கள் முன்னேற்றகரமான பங்கை ஆற்றிய போதிலும் இலங்கை தழுவிய சிந்தனையைத்தான் இவர்கள் பிரதிபலித்தனரே தவிர தமிழ்த்தேசிய குணாம்சத்தையல்ல.

பொதுவாகத் தமிழ்ப் புத்திஜீவிகளின் நலன்கள் அரச சார்பிலோ அன்றி அரச எதிர்ப்பின்மையிலேயே தான் தங்கியிருந்தன. இது இடது, வலதுசாரி புத்திஜீவிகள் அணிகள் இரண்டிற்குமே பொருந்தும். தமிழிற் தோன்றிய மாக்ஸிஸ பண்டிதர்கள் பலரை மாக்ஸிஸத்தின்பால் மட்டும் புரிந்து கொள்ளாது அரசசார்பு பதவி நிலையின்பால் வைத்துப் புரிந்து கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். அவர்களின் மாக்ஸிஸ முலாமிற்கு இப்படி ஓர் அர்த்தமும் உண்டு. இதனால் தமிழ்த் தேசிய ஓட்டத்திற்குஎதிர்முனையிலானகலை இலக்கியங்கள் 1960கள், 1970களில் முதன்மை நிலை அடைந்தன.

## மு. திருநாவுக்கரசு


தமிழ்த் தேசியத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும்இடையில் பெரும் இடைவெளி உண்டு என்று காலம்சென்ற பேராசிரியர் க. கைலாசபதி யாழ். பல்கலைக் கழகத்திற் கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில்கூறினார் (1982 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட பகுதியாய் இருக்கலாம்) அப்போது சாருமதி என அழைக்கப்படும் பல்கலைக் கழக மாணவன் எழுந்து''இவ்விடைவெளிக்குயார் பொறுப்பு''? எனக் கைலாசபதியைப் பார்த்துக் கேள்வி எழுப்பினார். தடுமாறிய கைலாசபதி ''எல்லோரும் பொறுப்பு'' என்றொரு

தேசியத்தை பிற்போக்கானது என மாக்ஸிஸப் பண்டிதர்கள் விளக்கி வந்ததால் தமிழ்த் தேசிய விடயங்களைத் தொடப் பல எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும் அஞ்சினர் அல்லது தயங்கினர். ''சேர். பொன், இராமநாதன் தன்னை முழுஇலங்கை தழுவிய தேசியத் தலைவனாக ஆக்க முற்பட்டாரே தவிர தமிழ்த் தேசியத்தின் தலைவனாக அல்ல'' என்ற கருத்தை எனக்கொரு பிரமுகர் கூறினார். இக்கருத்தில் பெரிதும் உண்மையுண்டு. பொதுவாகச் சமூக, பொருளாதார, அரசியல் ஆகிய அனைத்தையும் இணைத்த அர்த்தத்தில் தமிழ்த் தேசியம் கருக்கொள்ள முடியாதவாறு தமிழ் முன்னோடிகள் பலரும் காணப்பட்டனர். இவ்வாறாக உயர்குழாத்து முன்னோடிகளின் நலன்கள் தமிழ்த் தேசியத்திற்கு வெளியேயோ அன்றித் தமிழ்த் தேசியத்திற்கு எதிராகவோதான் காணப்பட்டன.

மக்களே வரலாற்றின் நாயகர்கள் இந்த உயர் குழாத்து நலன்களை எல்லாம் மீறிக் கொண்டு தமிழ்த் தேசியத்தின் முள்ளம் தண்டு தன்னை நிமிர்த்தியது உயர்குழாத்துச் சமரசங்களுக்கெல்லாம் அது முற்றுப்புள்ளி வைத்தது மாக்ஸிஸ பண்டிதர்களும்சரி, வலதுசாரி புத்திஜீவிகளும்சரி, முன்னைய தமிழ் அரசியற் தலைவர்களும் சரி இவர்கள் அனைவரும் உயர் குழாத்துச் சமரச வாதிகள்தான். தங்கள் நலன்களுக்காக இலகுவில் எதனுடனும் சமரசம் செய்யக்கூடியவர்கள்.

ஏதோ ஒரு வகையில் எல்லாத் துறைகளிலும் இத்தகையவர்களே தலைமைத்துவப் பாத்திரம் வகித்ததால் தமிழ்த் தேசியம் பல் பரிமாண வளர்ச்சியை அடையமுடியாத நிலை உருவானது. இவ்வாறாக ஸ்தம்பிதமடைந்த தமிழ்த் தேசிய வளர்ச்சி எல்லாத் துறையிலும் புதியதலை முறையின் வருகையை நோக்கவேண்டியதாயிற்று.

இவற்றால் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்என்ற அடிப்படையில் ஒரு புதிய தமிழ்த் தேசிய பண்பாட்டையும், தேசிய சமூக ஒருங்கிணைப்பையும், உருவாக்க வேண்டிய பெரும் பொறுப்பு இளம் தலைமுறையின் தோள்களிலும் தலைகளிலும் சுமத்தப்பட்டுள்ளது. இதில் பண்புரீதியான வளர்ச்சிக்கு ஒரு சமூகத்தை இட்டுச் செல்வது மிகவும்கடினமான ஒருபணியேயாகும். புதிய உலக வளர்ச்சியில் நின்று கொண்டே இத் தேசிய உருவாக்கம் பற்றிய




# 'ராவய'வைத் தடைசெய்ய அரசு முயல்கின்றதாம்

'ராவய' என்ற அரசஎதிர்ப்பு சிங்களவார இதழைத் தடைசெய்ய அரசு பல்வேறுபட்ட சட்டவிரோத நடவடிக்கைகளைமேற்கொண்டுவருவதாக மேற்படி ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

இந்த வகையில் ராவய பத்திரிகை இயங்கிவரும் கட்டடத்தின் உரிமையாளரான புகையிரத திணைக்களத்தின் பிரதான பொறியியலாளர் பழிவாங்கப்பட்டுள்ளார் என அவர் தெரிவித்தார். அவர் பதவியிறக்கப்பட்டு தூர இடமான 'வட்டவளை' என்ற இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

'ராவய' விடம் இருந்து கட்டடத்தை திரும்பப் பெற்றால் பழைய பதவி அவருக்கு மீள வழங்கப்படும் என அவரிடம் கூறப்பட்டுள்ளதாயும் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

## செயற்கை

னைப்போல சுயமாக சிந்திக்கும் ஆற்றலோ அல்லது நுண் அறிவோ( Intelligence) அற்றவை.

ஆனால் ஐந்தாம் தலைமுறைக் கணனிகள் செயற்கை நுண்ணறிவைக் (Artificial Intelligence) கொண்டவையாக அமையப்போகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது சிந்தித்துச் செயற்படப் போகின்றன என்பதாகும்.

இவ் ஆராய்ச்சியில் பல அமெரிக்க நிறுவனங்களும்ஜப்பானின் புதிய தலைமுறைக் கணனித் தொழில் நுட்ப நிறுவனமும் (ICOT) ஈடுபட்டு வருகின்றன.

எவ்வாறாயினும் கணனித் துறை ஆராய்ச்சிக்கென உலக விஞ்ஞானிகள் செலவிட்ட ''காலம்'' மிகவும் அதிகம் இக்காலத்தை போக்குவரத்து துறைக்கென செலவிட்டு இருப்பின் சாதாரண ஒரு மோட்டார் வாகனம் ஒரு கலன் எரிபொருளுக்கு 500 மைல்கள் ஓடக்கூடிய தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. எனினும் ஐந்தாம் தலைமுறை கணனி கண்டுபிடிக்கப்பட்டால் அக்கணனிகளே வேறுபல அரிய கண்டுபிடிப்புகளை செய்து விடும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

## இலக்கிய அவை

(குருநகர்)

யாழ் திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் 30ஆம் திகதிகளில் நடத்தும் இலக்கிய அவை இன்று வெள்ளிக்கிழமை மாலை 4. 30 மணிக்கு பிரதான வீதி கலாமன்றக் கேட்போர் கூடத்தில் நடைபெற இருக்கிறது.

அன்றைய தினம் ''பட்டிமன்றம்'' என்னும் பொருளில் திரு. இரா. செல்வவடிவேல் இலக்கியக் கருத்துரையை வழங்க உள்ளார். (21)

## விழுதுகள்

யிட்டு வாங்கிய பலரகமான டாங்கிகள் கொண்டு எமது மண்ணை ஆக்கிரமிப்புச்செய்ய முனைந்தது சிங்கள இராணுவத்திற்கெதிரான இச்சண்டை

## "அந்த நாளை அடைவதற்காய்"

அடர்ந்த காடுகளுக்கிடையில்
நாம் நடந்து கொண்டிருக்கிறோம்

க வேண்டி இருந்தது.

இதேபோல பல்வேறு நாடுகளினதும், இனங்களினதும் தேசிய உருவாக்கங்களின் போது அவற்றின் முன்னோடிகள் பெரும் துயரங்களையும் இரத்தம் தோய்ந்த வாழ்வையும் அனுபவிக்க வேண்டி இருந்தது எல்லாத் தேசங்களினதும் தேசிய உருவாக்கத்தில் சிந்தனையாளர்கள் (புத்திஜீவிகள்) முதலடி எடுத்துவைத்துத் துயரத்தின் முதல் அடியைத் தம் முகத்தில் வாங்கிக் கொள்கின்றனர் பிரான்சில் ரூஷோ, வல்டயர், மொண்டஸ்கியூ போன்றோரையும், ரஷ்யாவில் ரோல்ஸ்ரோயையும், இந்தியாவில் ஓரளவிற்கு மோகன்றோயையும் இதற்கு உதாரணமாய்க் காட்டலாம். கலை, இலக்கியம், பொருளாதாரம், பண்பாடு போன்ற பல்வேறு அம்சங்கள் சார்ந்த சிந்தனைகளும் செயற்பாடுகளும் இத்துடன் ஒன்று சேர்ந்து விடுகின்றன.

சிந்தனை அர்த்தத்தில் அது போதியளவு உருப்பெறவில்லை முழுமைப்பட்ட தமிழ்த் தேசிய அர்த்தத்திற் கூறமுடியாததாயினும் மொழி உணர்வை வெளிப்படுத்தும் வகையிலும், கலை, இலக்கியத் துறைகளிலும் ஒரு சில தமிழ்ப் புத்திஜீவிகள் அடியெடுத்து வைத்திருந்தனர். இந்த வகையில் காலம் சென்றவர்களான பேராசிரியர். சு. வித்தியானந்தன், வண. தனிநாயகம் அடிகளார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆனால் பொதுவான புத்திஜீவிகளின் போக்கு தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்தும் வகையதாய் அமையவில்லை. பெருமளவுக்கு முழு இலங்கை தழுவிய தேசியச் சிந்தனையே வலதுசாரி, இடது சாரிச் சிந்தனையாளர்களிடம் காணப்பட்டது, குறிப்பாக கலை, இலக்கிய சிந்தனைத் துறையில் பெரும் ஆதிக்கம் வகித்த

1970களில் முதன்மை நிலை அடைந்தன.

நிலை உருவானது. [illegible] றாக ஸ்தம்பிதமடைந்த தமிழ்த் தேசிய வளர்ச்சி எல்லாத்

## மு. திருநாவுக்கரசு

தமிழ்த் தேசியத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் இடையில் பெரும் இடைவெளி உண்டு என்று காலம்சென்ற பேராசிரியர் க. கைலாசபதி யாழ். பல்கலைக் கழகத்திற் கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் கூறினார் (1982 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட பகுதியாய் இருக்கலாம்) அப்போது சாருமதி என அழைக்கப்படும் பல்கலைக் கழக மாணவன் எழுந்து ''இவ்விடைவெளிக்கு யார் பொறுப்பு''? எனக் கைலாசபதியைப் பார்த்துக் கேள்வி எழுப்பினார். தடுமாறிய கைலாசபதி ''எல்லோரும் பொறுப்பு'' என்றொரு சப்பைக்கட்டுப் பதிலை அளித்தார். உண்மையில் தமிழ்த் துறையிலும் புதிய தலை முறையின் வருகையை நோக்கவேண்டியதாயிற்று.

இவற்றால் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற அடிப்படையில் ஒரு புதிய தமிழ்த் தேசிய பண்பாட்டையும், தேசிய சமூக ஒருங்கிணைப்பையும், உருவாக்க வேண்டிய பெரும் பொறுப்பு இளம் தலைமுறையின் தோள்களிலும் தலைகளிலும் சுமத்தப்பட்டுள்ளது. இதில் பண்பு ரீதியான வளர்ச்சிக்கு ஒரு சமூகத்தை இட்டுச் செல்வது மிகவும் கடினமான ஒருபணியே யாகும். புதிய உலக வளர்ச்சியில் நின்று கொண்டே இத் தேசிய உருவாக்கம் பற்றிய புதிய சிந்தனைகளும் வளர வேண்டும்.

அறிவோர் (Intelligence) அற்றவை.

ஆனால் ஐந்தாம் தலைமுறைக் கணனிகள் செயற்கை நுண்ணறிவைக் (Artificial Intelligence) கொண்டவையாக அமையப்போகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது சிந்தித்துச் செயற்படப் போகின்றன என்பதாகும்.

இவ் ஆராய்ச்சியில் பல அமெரிக்க நிறுவனங்களும் ஜப்பானின் புதிய தலைமுறைக் கணனித் தொழில் நுட்ப நிறுவனமும் (ICOT) ஈடுபட்டு வருகின்றன.

இக்காலத்தை போக்குவரத்து துறைக்கென செலவிட்டு இருப்பின் சாதாரண ஒரு மோட்டார் வாகனம் ஒரு கலன் எரிபொருளுக்கு 500 மைல்கள் ஓடக்கூடிய தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. எனினும் ஐந்தாம் தலைமுறை கணனி கண்டுபிடிக்கப்பட்டால் அக்கணனிகளே வேறுபல அரிய கண்டுபிடிப்புகளை செய்து விடும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

## இலக்கிய அவை

(குருநகர்)

யாழ் திருமறைக் கலா மன்றம் மாதந்தோறும் 30ஆம் திகதிகளில் நடத்தும் இலக்கிய அவை இன்று வெள்ளிக்கிழமை மாலை 4. 30 மணிக்கு பிரதான வீதி கலாமன்றக் கேட்போர் கூடத்தில் நடைபெற இருக்கிறது.

அன்றைய தினம் ''பட்டிமன்றம்'' என்னும் பொருளில் திரு. இரா. செல்வவடிரேல் இலக்கியக் கருத்துரையை வழங்க உள்ளார். (21)

## குடாநாட்டின்...

செயலாளர் வட இலங்கை மருத்துவர் சங்கம்
முன்னாள் பணிப்பாளர்
மூளாய்
கூட்டுறவு ஆஸ்பத்திரி
டாக்டர்
எஸ். சிவானந்தராசா



★ 1990 ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பித்தது முதல் கொண்டு எப்பொழுதும் இல்லாத வகையில் யாழ். தீப கற்பத்தில் மருந்துத் தட்டுப்பாடு தலைதூக்கியுள்ளது.

★ சுமார் 75 விகிதமான நோயாளர்கள் தனியார் மருத்துவர்களையும் மருத்துவமனைகளையுமே நாடுகிறார்கள். அத்துடன் இந்தப் போராட்ட நிர்ப்பந்த காலத்தில் தனியார் மருத்துவ மனைகளின் மருந்துத் தேவை அதிகரித்துள்ளது. இந் நிலையில் ஜே. ஓ. சி. யாழ். குடா நாட்டிற்கு மருந்து எடுத்து வரத் தடை விதித்ததன் மூலம் மருந்துக்கான பற்றாக்குறையை அதிகரிக்கச் செய்துள்ளது.

★ பார்மஸிகளும் தமது பிரதிநிதிகளை மருந்து கொள்வனவு செய்யக் கொழும்புக்கு அனுப்புவதில்லை. விரல் விட்டு எண்ணக் கூடிய பார்மஸிகளே தமது பிரதிநிதிகளை கொழும்புக்கு அனுப்புகிறார்கள்.

★ மருந்து இறக்குமதி செய்யும் வர்த்தகர்களும் மருத்துவர், மருத்துவ மனைகள், மற்றும் பார்மஸிகளுக்குப் போதுமான அளவு மருந்து வழங்குவதில்லை. மருந்துகளைச் சைக்கிள் வியாபாரிகளிடம் கொடுத்துக் கூடிய விலைக்குப் பார்மஸிகளுக்கு விற்கிறார்கள். விலையின் சுமை நோயாளரின் மேல் சுமத்தப் படுகிறது. சில வர்த்தகர்கள் மருந்தைப் பதுக்கிச் செயற்கையான தட்டுப்பாட்டை உண்டாக்கி விடுகிறார்கள். 'குமண' வரும் நாள் அண்டியதும் மருந்து விலையில் வீழ்ச்சி ஏற்படுவதிலிருந்து நீங்கள் இதனை அவதானிக்கலாம்.

★ 50 விகிதமான மருந்து மருத்துவர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்று முதலில் ஒப்பந்தமாகியது. முன்னுரிமை முறையே மருத்துவர்களுக்கும், மருத்துவமனைகளுக்கும், பார்மஸிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இந்த ஒழுங்கு முற்றாகப் பின்பற்றப்படுவதில்லை இதனால் எம்வசம் மருந்து பற்றாக்குறையாகவே உள்ளது

★ மருத்துவர் எழுதிக்கொடுக்கும் சீட்டில்லாமல் மருந்தை ஒவ்வொருவரும் விரும்பியபடி வாங்குவதாலும் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது.

★ தனியார் மருத்துவர்களுக்கு ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டின் ஒருபகுதியையாவது சமாளிக்கும் வகையில் எமது சங்கம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் மருந்துகளை யாழ்ப்பாணம் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

★ ★ ★

உரிமையாளர் :
பரணி மருந்துச்சாலை
சிவஞானம்
சிறிகணேஷன்



★ ஜே. ஓ. சியின் அறிவிப்பைத் தொடர்ந்து உயிர் காக்கும் மருந்து வகைகளை யாழ். குடாநாட்டுக்குத் தனி மனிதர் அல்லது வர்த்தகர் எடுத்து வரத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் யாழ்குடாநாட்டில் மருந்து வகைகளுக்குப் பெரும் அருந்தல் ஏற்பட்டுள்ளது.

★ ஜே. ஓ. சியின் தடை ஒருபுறமிருக்க அப்போதைக்கப் போது கிடைக்கும் மருந்து வகைகள் விற்கப்படும் முறை திருப்தியளிக்காத நிலையில் ஏலவே நிலவிய மருந்துத் தட்டுப்பாடு மேலும் அதிகரித்துள்ளது. மருந்தாளர் [Pharmacist] அல்லது பயிலுனர் மருந்தாளர் இல்லாதபார்மஸிகளிலிருந்து மருந்து தேவையற்றோர் கைக்குப் போய்ச் சேர்கிறது இதனால் உண்மையான பாவனையாளர்கள் மருந்தைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த வகையில் ஏற்படும் மருந்துத் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்கு அங்கீகாரம் பெறாத பார்மஸிகள் மருந்து விற்பனை செய்வதை முற்றாகத் தடை செய்ய வேண்டும்.

★ மருந்து இறக்குமதி வர்த்தகர்கள் மருந்துப் பொருள்களை விநியோகம் செய்யும் விஷயத்தில் பதிவு செய்யப்பட்ட பார்மஸிகளுக்குச் சீராக வழங்கப்படுவதில்லை. இப்பார்மஸிகளுக்கு மருந்து வகைகளை ஒழுங்காக வழங்கினால் ஏற்புடைய ஒரு முறையில் மருந்து வகைகளை நோயாளர்களுக்கு விற்பதன் மூலம் தட்டுப்பாட்டை ஓரளவுக்கு நிவர்த்திசெய்துகொள்ளலாம்.

★ மருந்து வகைகளைத் தகுதி வாய்ந்த வைத்தியர்களின் சீட்டுப் பெறாமல் தன்னிச்சைப்படி மருந்தைப் பொதுமக்கள் பாவிப்பதாலும் [Self Medication] எரிகிற நெருப்புக்கு எண்ணெய் ஊற்றுவது போல் மருந்துத் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கிறது.

## "அந்த நாளை அடைவதற்காய்"

அடர்ந்த காடுகளுக்கிடையில்
நாம் நடந்து கொண்டிருக்கிறோம்
கைகளில் தோழனின் உடலுடன்
நாம் நடந்து கொண்டிருக்கிறோம்.

இரண்டு நாட்கள் உண்ணாத களை
எமை வாட்டிக் கொண்டிருந்தாலும்
நாம் நடந்து கொண்டிருக்கிறோம்
எம் தோழனின் உடல் எமக்கு
பாரமாக இருக்கவில்லை — மனத்தில்
இருந்த பார சுமைகளால்.

நேற்றுவரை எங்களுடன்
நடந்து வந்தவனை சுமந்துகொண்டு
நாம் நடந்து கொண்டிருக்கிறோம்.

கையிலிருக்கும் துப்பாக்கி
கனலாய் பொழிய
முகம் தெரியா காடுகளுக் கிடையில்...
புல்முளைத்தறியா வெட்டவெளிகளில்
ஒன்றாக தோளோடு தோள் நின்று
போராடிய எங்கள் சகோதரனை
சுமந்து கொண்டு
நாம் நடந்து கொண்டிருக்கிறோம்
எம் நெஞ்சில்
அவனின் முள்ளாய் நெரிடும் நினைவுகளை
சுமந்து கொண்டு
நாம் நடந்து கொண்டிருக்கிறோம்.

அந்த நாளை அடைவதற்காய்
மனதிலுள்ள சுமைகள் இறக்கப்படும்
அந்த நாளை அடைவதற்காய்
நாம் நடந்து கொண்டிருக்கிறோம்.

நாட்கள் செல்லலாம்
நாளை அவன்
எம்மண்ணில் தூபியாய் வாழலாம்
நாமும் சென்று
அப்படியே வாழலாம்.
ஆனால்
பாதைகள் மாறாது
பயணங்கள் சோராது
எங்கள் நெஞ்சங்களின்
சுமைகள் இறக்கப்படும்வரை
எம் கால்கள் களைப்பறியாது
ஓ! அந்த நாளை அடைவதற்காய்
நாம் நடந்து கொண்டிருக்றோம்.

சுஜோ

## விழுதுகள்

யிட்டு வாங்கிய பலரகமான டாங்கிகள் கொண்டு எமது மண்ணை ஆக்கிரமிப்புச்செய்ய முனைந்தது சிங்கள இராணுவத்திற்கெதிரான இச்சண்டையில் எதிரியின் டாங்கிகள் அடித்து நொருக்கப்பட்டன. உறுமித்திரிந்து குண்டு மாரி பொழிந்த எதிரியின் வானூர்திவை 8 வான் வெளியில் சுடப்பட்டு வெடித்துச் சிதறியது இவ்வாறு தாக்குதலானது நடந்து கொண்டிருந்தது.

எமது போராளிகள் ஓய்வின்றி, உறக்கமின்றி, குளிக்க நேரமின்றி, உடுத்த உடையுடன் எதிரியின் வரவை எதிர்பார்த்து காத்து நின்றனர், இவ்வேளையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக இவனது துப்பாக்கியுடன் சக போராளிகளின் துப்பாக்கியும் சேர்ந்து கொண்டது அதே போன்று எதிரியின் ரவைகளும் எமது காவலரன்களை நோக்கி விரைந்தன. தமிழ்மாறனின் துப்பாக்கியின் முழக்கம் நிறுத்தப்பட்டது, எதிரியின் குண்டு பட்டு அவன் நிலையெடுத்திருந்த இடம் செங்குருதியால் நிறம் மாறியது.

இவனது பிரிவானது எமது விடுதலைப் போராட்டத்தில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அத்துடன் இலக்கியத் துறையில் ஓர் இளங்குருத்து கருகியது இவன் இறுதியாய் நிரந்தர உறக்கத்தில் இருந்ததை எனக்குப் பார்க்கும் இறுதிச் சந்தர்ப்பம் கூடக்கிடைக்கவில்லை, பத்திரிகைச் செய்திகளையும் அவனைத் தூக்கத்தில் பார்த்தவர்கள் சொன்னதைக் கொண்டும் என்னால் நம்பமுடியவில்லை ஆனாலும் உன் உடல் அழிந்தாலும் உனது இலட்சியம், இலக்கியம் என்பவற்றில் உன்னை நாம் தினமும் பூசிப்போம்.

உன் உடல் தாயகமண்ணில்
உரமானது
உன் வீரம் இம்மண்ணில்
விதைக்கப்பட்டது
உன் வீரச்சாவு கற்றவர்களுக்கு முன்னுதாரணமாகியது

சூ. துஷ்யந்தன்

ஈழநாதம்

## கருத்துரை

(யாழ்ப்பாணம்)

'பல்லவர் காலச்சமயநிலை' எனும் தலைப்பிலான கருத்துரை ஒன்று இன்று மாலை 3 30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி தலைப்பிலான கருத்துரையை திருமதி அருள் நங்கை நிகழ்த்தவுள்ளார். க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மிகவும் பயனளிக்கக் கூடிய இக் கருத்துரையை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புஒழுங்குசெய்துள்ளது

# அகதிகள் வருவதை தடுக்காவிட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும்

## - ஜெர்மன் அதிபர் எச்சரிக்கை

வெளிநாட்டு அகதிகளின் படையெடுப்பை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஜெர்மன் அரசு மேற்கொள்ள தவறுமேயானால் ஜெர்மனி அவசரகால நிலை ஒன்றை எதிர்நோக்க வேண்டி வரும் என ஜெர்மன் அதிபர் ஹெல்மட்ஹோல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எங்களால் தாங்கிக் கொள்ளக்கூடிய எல்லையை தாண்டி விட்டோம். அகதிகள் வருகை மாத மாதம் அதிகரித்துச் செல்கின்றது. இவ்வருடம் மாத்திரம் நான்கு இலட்சத்திற்குமதிகமான அகதிகள் வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது இவற்றை தடுத்து நிறுத்தாது விட்டால் எமது ஜனநாயக அரசில் பாரதூரமான நம்பிக்கையின்மை நெருக்கடியை நாம் எதிர்நோக்க வேண்டிவரும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து தனது கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் கட்சியின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய ஹோல் அகதிகளுக்கான கொடுப்பனவுகளை குறைந்த பட்சமாக குறைக்கப்படவேண்டும், அகதிகள் படையெடுப்பைத் தடுப்பதற்கேதுவாக 1949 அரசியல் அமைப்பைத் திருத்தவேண்டும் என வலியுறுத்தினார்.

# கியூபெக்கிற்கு சுயாட்சி வழங்கும் திட்டம் மக்களால் நிராகரிப்பு

(ஒட்டாவா)

கனடாவின் கியூபெக் மாகாணத்திற்கு கூடுதல் சுயாட்சி வழங்கும் நோக்கத்துடன் மாகாணங்களின் தலைவர்களுடன் பிரதமர் பிரையன் மல்ரோனி சேர்ந்து வகுத்திருந்த திட்டத்தை கனேடியர்கள் சர்வ சனவாக்கெடுப்பின் மூலம் நிராகரித்துள்ளனர்.

கனேடிய அரசியல் அமைப்பில் ஏற்படுத்தப்பட இருந்த பாரிய மாற்றங்களுக்கு கனடாவின் பிரதமரும், கியூபெக் மாகாண முதலமைச்சர் உட்பட மாகாண பிரதம அமைச்சர்களும், பிராந்தியமாகாண அமைச்சர்களும், நான்கு தேசிய பழங்குடி அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஏக மனதாக ஆதரவு தெரிவித்திருந்தனர்.

இத்திட்டத்தை கனடாவின் 10 மாகாணங்களில் ஆறு மாகாணங்கள் நிராகரித்து விட்டன என்பதை சர்வசன வாக்கெடுப்பின் முடிவுகள் காட்டுகின்றன.

சீர்திருத்தங்களை உள்ளடக்கிய உடன்படிக்கையை கியூபெக்மாகாணமும் எதிர்த்து வாக்களித்துள்ளது. அங்கு உடன்படிக்கைக்கு ஆதரவாக 43 4 சதவீத வாக்குகளும் எதிராக 56.6 சதவீதவாக்குகளும் கிடைத்துள்ளன.

நோவாஸ்கோட்டியா, மானிடோபா, சாஸ்காச்செடின், அல்பேர்ட்டா, பிரிட்டிஷ், கொலம்பியா ஆகிய மாகாணங்களும் உடன்படிக்கையை நிராகரித்தன.

அத்திலாந்திக் கரையோரமாக அமைந்திருக்கும் சில சிறிய மாகாணங்களே உடன்படிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தன.

இதனால் பிரதமர் மல்ரோணியின் எதிர்காலம் குறித்த நிச்சயமற்ற தன்மை தோன்றியுள்ளதுடன் பிரெஞ்சு மொழி பேசும் கியூபெக் மாகாணம் நாட்டிலிருந்து பிரிந்து செல்ல வேண்டுமென விரும்புவோரின் குரல் வலுவடையும் நிலைமை தோன்றியுள்ளது.

இவ் வாக்கெடுப்பில் ஆதரவான முடிவுகிடைத்திருந்தால் சிறுபான்மையினர் பிரச்சினையை சிறந்த முறையில் தீர்த்த உலக நாடாக கனடா விளங்கியிருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

## மகளிர் பொற்கணக்கு

முதலாவது சீட்டிழுப்பில் கலந்து கொள்வதற்கு கணக்கினைத்திறக்கும் கடைசி நாள் நாளை என்பதனால், வாடிக்கையாளர் நலன் கருதி யாழ்ப்பாணம், இலங்கை வங்கி, மேற்தரக்கிளை, ஸ்ரான்லி வீதிக்கிளை, மற்றும் சுன்னாகம் கிளை ஆகியன அன்று மேற்குறிப்பிட்ட கணக்கினைத் திறப்பதற்காக விசேஷமாகத் திறக்கப்பட்டு செயலாற்றப்படுமென்பதை இலங்கை வங்கி யாழ் மேற்தரக்கிளை பிரதான முகாமையாளர் தெரிவித்துக்கொள்கின்றார்.

## தமிழ் நில அளவையாளர் மாத்தளையில் கைது

(மாத்தளை)

மாத்தளை அரச விடுதியில் தங்கியிருந்த நில அளவையாளர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அண்மையில் இடமாற்றம் பெற்று மாத்தளைக்குச்சென்ற இவரைப்பற்றி இரகசிய தகவல் ஒன்று கிடைத்ததை அடுத்து இவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

இவரிடம் நில அளவையாளருக்குரிய அடையாள அட்டை இருந்த போதும்புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## கலந்துரையாடல்

மாரீசன் கூடல் கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 06-11-1992 ஆம் திகதி காலை 10. 00 மணிக்கு நாவடியில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் உறுப்பினர்களுக்கான சுய உதவிக் கடன் பெறுவதற்கான முயற்சிகள் சம்பந்தமாக ஆராயப்படும்.

உறுப்பினர் அனைவரும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## நாய்களை கட்டி வளர்க்கவும்

கட்டாக்காலி நாய்களை ஒழிப்பதற்கு இலகுவாக பொதுமக்கள் தங்கள் வீட்டு நாய்களை கட்டி வளர்க்க வேண்டும் என யாழ். மாநகர சபை ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; தற்போது கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பதற்கு மொத்தமாக 03 வண்டில்களே தற்சமயம் இருக்கின்றது. தற்போது மாநகரசபை மேலதிகமாக, நாய்பிடிப்பதற்கான 02 கைவண்டில்களை தயார்செய்துள்ளது. இதற்கான நிதியானது மாநகர சபையின் பிரமாண அடிப்படையிலான முதலீட்டு வேலைத் திட்டத்தின் கீழ் பெறப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (07)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று 19 வயதுப் பிரிவினருக்கான நான்கு ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன

பல்கலைக்கழக விளையாட்டரங்கில் பிற்பகல் 3 மணிக்கு மத்திய கல்லூரி எதிர் புங்குடுதீவு மகா வித்தியாலயம், 4 மணிக்கு உரும்பராய் இந்து எதிர் சாவகச்சேரி இந்து

மத்திய கல்லூரி விளையாட்டரங்கில் பிற்பகல் 3 மணிக்கு வட்டு இந்துக்கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதய கல்லூரி, 4 மணிக்கு கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் சாவகச்சேரி றிபேக் கல்லூரி.

## நோர்வே பிரதிநிதி யாழ் வந்தார்

(வடமராட்சி)

நோர்வேநாட்டைச் சேர்ந்த பிரதிநிதிஒருவர்நேற்று குமண கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

இவர் யாழ் மாவட்டத்தில் சில தினங்கள் தங்கியிருந்து நிலைமையை அவதானித்து செல்வார் என அறியப்படுகிறது.

நோர்வே தூதுவராலயத்தைச் சேர்ந்த திரு ரிவெக்டர் என்பவரே இங்கு வந்தவர் ஆவார். (82)

## பிரதேச செய்தியாளர்கள் தேவை

தென்மராட்சிப் பகுதிக்கான பிரதேச செய்தியாளர் பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்படவுள்ளது. இதில் கடமை புரிய விரும்புவோர் தமது தகைமைச் சான்றிதழ்களுடன் புதன்கிழமை ( 04-11-1992 ) எமது காரியாலயத்திற்குச் சமுகமளிக்கவும். பளை, எழுதுமட்டுவாள் பகுதியில் வசிப்பவர்களுக்கும்முன் அனுபவம்உள்ளசெய்தியாளர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்

- ஆசிரியர்

## இல. தமிழர் தமிழகத்தில் கைது

(சென்னை)

தமிழ்நாட்டில் ஈரோடு அருகே இரண்டு இலங்கைத் தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீது திருப்பூர் அருகே இரவு நேரங்களில் இடம்பெற்ற சங்கிலித்திருட்டு உட்பட தமிழகத் தீவிரவாதிகளுக்கு ஆயுதம் வழங்கியது ஈறாகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் பொலிசாரால் சுமத்தப்பட்டுள்ளன.

## துர்க்காபுரம்வரை போக்குவரத்து

(சுன்னாகம்)

வலி வடக்கில், மல்லாகம் சந்திவரை இதுவரை காலமும் நடைபெற்று வந்த தனியார் மினிபஸ் போக்குவரத்துச் சேவை, தெல்லிநகர் துர்க்கை அம்மன் ஆலய உற்சவத்துடன் துர்க்காபுரம் வரை தங்கள் சேவையை நீடித்துள்ளது.

துர்க்காபுரம் ஆலயச் சூழலில்.முன்னைய அசம்பாவிதங்களினால் மூடப்பட்டிருந்த தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க கிளையொன்று மீளத் திறக்கப்பட்டுள்ளது. (11)

## கொக்குவில் இந்துக் கல்லூரி 1993ஆம் ஆண்டு ஆண்டு 6 அனுமதிக்கான பிரவேசப் பரீட்சை

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ரூபா 15/- செலுத்திக் காரியாலயத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம். 04-11-1992 புதன்கிழமைக்கு முன் பூரணப்படுத்திய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துப் பரீட்சைக்கான அனுமதியட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்

(சி-5325)

## அரச ஆஸ்பத்திரியில் திடீர் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு முக்கிய அரசாங்க ஆஸ்பத்திரியில் திடீர் வேலைநிறுத்தம் நேற்று நடைபெற்றது. இதனால் பல நோயாளிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அரசினால் வழங்கப்பட்ட உறுதி மொழியை அரசு நிறைவேற்ற தவறியமையினால் தாம் இவ்வாறு வேலை நிறுத்தம் செய்ய வேண்டி வந்ததாக தொழில் சங்க சம்மேளனத்தலைவர் திரு. நிமால் நியனகே தெரிவித்தார்.

வெளிநோயாளர் பிரிவில் நோயாளருக்கு மருந்துவகை

## உ
## ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனை

உருத்திரபுரம் சிவன்கோயில் பிரதம குருக்கள்

சிவத்திரு நாகேந்திரசர்மா அவர்கள்

28-10-92ஆம் நாள் சிவபதமடைந்துள்ளார். இவர் எமது சகோதர பயிற்சி ஆசிரியர் பிரமஸ்ரீ நா இரத்தினேஷ் சர்மா அவர்களுடைய தந்தையார் ஆவார் இவருடையபிரிவால் துயருறும் இரத்தினேஷ் சர்மாவுக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த துயரத்தைத்தெரிவிப்பதுடன் சிவத்திரு நாகேந்திர சர்மாவுடைய ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், விரிவுரையாளர்கள்
இந்துசமய நெறியினர்
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை,
கோப்பாய்.

(3553)

மருத்துவ

நேற்று பிற்பகல் 12. 30

களுடன் புதன்கிழமை ( 04-11-1992 ) எமது காரியால யத்திற்குச் சமுகமளிக்கவும். பளை, எழுதுமட்டுவாள் பகுதியில் வசிப்பவர்களுக்கும்முன் அனுபவம்உள்ளசெய்தி யாளர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்

- ஆசிரியர்

---

கொக்குவில் இந்துக் கல்லூரி

## 1993ஆம் ஆண்டு

## ஆண்டு 6 அனுமதிக்கான

## பிரவேசப் பரீட்சை

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ரூபா 15/- செலுத்திக் காரியாலயத்தில் நேரில் பெற்றுக் கொள்ள லாம். 04-11-1992 புதன்கிழமைக்கு முன் பூரணப்படுத் திய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துப் பரீட்சைக்கான அனுமதியட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்

(சி-5325)

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

**சுந்தரம்பிள்ளை கிருச்செந்தூர்நாதன்**

(சந்திரன்)

அன்னை மடியில் 22-04-1964

இறைவனடியில் 14-11-1988

திதி

30-10-1992

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
உன் நினைவுகள் எம்மை விட்டு அகலாது

உன் நினைவுடன் வாழும்

காரைக்கால்,
இணுவில் கிழக்கு.

-குடும்பத்தினர்

(3219)

---

அருகே இரண்டு இலங்கைத் தமிழ் இளைஞர்கள் பொலி சாரால் கைதுசெய்யப்பட்டுள் ளனர். இவர்கள் மீது திருப் பூர் அருகே இரவு நேரங்களில் இடம்பெற்ற சங்கிலித்திருட்டு உட்பட தமிழகத் தீவிரவாதி களுக்கு ஆயுதம் வழங்கியது ஈறாகப் பல்வேறு குற்றச்சாட் டுக்கள் பொலிசாரால் சுமத் தப்பட்டுள்ளன.

மாக 03 வண்டில்களே தம்சம யம் இருக்கின்றது. தற்போது மாநகரசபை மேலதிகமாக, நாய்பிடிப்பதற்கான 02 கைவ ண்டில்களை தயார்செய்துள் ளது. இதற்கான நிதியானது மாநகர சபையின் பிரமாண அடிப்படையிலான முதலீட்டு வேலைத் திட்டத்தின் கீழ் பெறப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (07)

# அரச ஆஸ்பத்திரியில் திடீர் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு முக்கிய அர சாங்க ஆஸ்பத்திரியில் திடீர் வேலைநிறுத்தம் நேற்று நடை பெற்றது. இதனால் பல நோ யாளிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அரசினால் வழங்கப்பட்ட உறுதி மொழியை அரசு நிறை வேற்ற தவறியமையினால் தாம் இவ்வாறு வேலை நிறுத் தம் செய்ய வேண்டி வந்த தாக தொழில் சங்க சம் மேளனத் தலைவர் திரு. நிமால் நியனகே தெரிவித்தார்.

வெளிநோயாளர் பிரிவில் நோயாளருக்கு மருந்துவகை முற்றாக வழங்கப்படவில்லை என்றும் 16 வருடத்திற்கு பின் னர் இப்படியான நடவடிக்கை நடைபெற்றது இதுவே முதல் தடவைஎனவும்தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், இது அடையாள வேலை நிறுத்தமே என்றும் நாளை முதல் இதில் பங்கு பற்றிய தாதிமார் மருந்து கலவையா ளர் கடமை செய்வார்கள் என் றும்,

அரசு தொடர்ந்து தமது கோரிக்கையை உதாசீனம் செய்தால் தாம் போராட்டம் நடத்த தயங்கப்போவதில்லை என்றார்

---

### மருத்துவ

நேற்று பிற்பகல் 12 30 மணிமுதல் மாலை 5. 00 மணி வரை இப்போராட்டம் தொடர்ந்தது முதலாம்வருட மாணவர்கள் மதிய உணவு உண்ணச் சென்ற சமயமே காற்று திறக்கப்பட்டதால் அவர்கள் மதிய உணவு இன்றி மாலைவரை மருத்துவபீட கட்டடத்திற்கு முன்னால் அமர்ந்திருந்தனர். அவர்களு டன் இணைந்து ஏனைய மரு த்துவபீட மாணவர்களும் அமர்ந்திருந்தனர். மருத்துவ பீடமா? பாடசாலையா? ''எங்களுக்குள் வேறுபாடு இல்லை. சிரேஷ்ட, கனிஷ்ட மாணவர்களை பழகவிடு'' ''மாணவர் உரிமைகளைப் பறிக்காதே'' போன்ற சுலோகங் களைத்தாங்கியவாறு மழைத் தூறல்களுக்கு மத்தியிலும் குடைபிடித்தவாறு அமர்ந்திரு ந்தனர்.

இதனைத் தொடர்ந்து மருத்துவபீட மாணவர் ஒன் றியத்தினர் மருத்துவ பீடாதி பதியுடன் பேச்சு நடாத்தினர். இது தோல்வியில் முடிவடை ந்ததைத் தொடர்ந்துபல்கலை க்கழக துணைவேந்தரிடம் முறையிடப்பட்டது. தொடர் ந்து இவ்விடயம் தொடர்பாக துணைவேந்தர், மருத்துவ பீடாதிபதி மற்றும் ஏனைய உயர் அதிகாரிகள் நீண்ட நேரமாக கூடி ஆராய்ந்தனர். இதைத் தொடர்ந்து சுமார் 88 முதலாம் வருட மாணவர் களது துவிச்சக்கரவண்டிகளில் இருந்து கழற்றி எடுக்கப்பட்ட சுமார் 176 வால்கட்டை களும் மாணவர்களிடம் ஒப் படைக்கப்பட்டன. எனினும் இவ்வாறான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நடைபெற மாட்டாது என்று உறுதி மொழி தரப்பட வேண்டும் என்று மாணவர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இது குறித்து எதிர்வரும் திங் கட்கிழமை ஆராய்ந்து முடி வெடுக்கப்படும் என்று அறி விக்கப்பட்டதைத் தொடர்ந்து மாணவர்கள் கலைந்து சென் றனர். (க)

---

### மேலும் 27 பேர் விலகினர்

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலி - காமினி திசாநாயக்கா கட்சியி லிருந்து மேலும் 27 பேர் ராஜி னாமாச் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

### மீட்புநிதி

மகா வித்தியாலயத்திலும், பச்சிலைப்பள்ளி உதவி அர சாங்க அதிபர் பிரிவைச் சேர்ந் தவர்களுக்கான மீட்புநிதி சேகரிப்பு பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 4.00 மணிவரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

---

### குடலிகம

ளுக்கு எதிராக துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்க ளைப் பயமுறுத்தியதான சம் பவத்தில் தாராளமாக துப் பாக்கிச் சன்னங்களையும் ஆயு தங்களையும் பாவிக்க காரண மாய் இருந்தார் என்ற குற்றச் சாட்டில் அவர் நிரபராதியாக இராணுவ நீதி மன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டார்.

இரண்டு குற்றச் சாட்டுக்க ளில் குற்றவாளியாகக் காணப் பட்ட லெப்டினன்ட் குடலிகம விற்கான தண்டனையை உறுதி செய்யும் பொருட்டுஇவ் விடயம் இராணுவத் தளப திக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

---

நிலைமையை அவதானித்து செல்வார் என அறியப்படு கிறது.

நோர்வே தூதுவராலயத் தைச் சேர்ந்த திரு ரிவெக்டர் என்பவரே இங்கு வந்தவர் ஆவார். (82)

### துர்க்காபுரம்வரை போக்குவரத்து

(சுன்னாகம்)

வலி வடக்கில், மல்லாகம் சந்திவரை இதுவரை காலமும் நடைபெற்று வந்த தனியார் மினிபஸ் போக்குவரத்துச் சேவை, தெல்லிநகர் துர்க்கை அம்மன் ஆலய உற்சவத் துடன் துர்க்காபுரம் வரை தங்கள் சேவையை நீடித்துள் ளது.

துர்க்காபுரம் ஆலயச் சூழ லில்.முன்னைய அசம்பாவிதங் களினால் மூடப்பட்டிருந்த தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க கிளையொன்று மீளத் திறக்கப்பட்டுள்ளது. (11)

### தொழிற்சங்க பிரிவு மூடப்பட்டது

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திர கட்சி யின் தொழிற் சங்கபிரிவு மூடப் பட்டுவிட்டதாக கட்சி உயர் மட்ட பிரதிநிதி ''திவயின'' பத்திரிகைக்கு தெரிவித்துள் ளார்

கட்சித் தலைவி திருமதி சிறி மாவோபண்டாரநாயக்காவின் வேண்டுதலின் பெயரிலேயே தொழிற் சங்க பிரிவு மூடப்பட் டிருப்பதாகவும் கூறப்படுகின் றது.

---

### தப்பி

அவ்வேளை அங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த மற் றொரு பொலிசார் இவர்கள் மீது சந்தேகம் கொண்டு உட னடியாக இராணுவப் பொலி சிற்கு தகவல் கொடுத்தார் தகவல் கிடைத்ததும் அவ் விடத்திற்கு விரைந்து வந்த பொலிசார் மேற்படி பொலி சாரைகைதுசெய்ததுடன்அவர் களால்மறைத்துவைக்கப்பட்ட சீருடைகளையும்கைப்பற்றினர்

---

### விமான

வால் விபத்து ஏற்பட்டிருக்க லாம் எனச் சந்தேகிக்கப்படு வதால், விசாரணை மேற் கொள்ளப்பட விருப்பதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன ஹெலிகப் டருக்கு அதிக சேதம் ஏற்பட வில்லை என்றும் அதே வட் டாரங்கள் கூறுகின்றன. இச் சம்பவம் கடந்தசெவ்வாயன்று இடம்பெற்றது.

---

### பிரதமர்

பிரிகேடியர் செமுனு குலதுங்க உட்பட உயர் இராணுவ அதி காரிகள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றையும் நடத்தி னார். இம்மாநாட்டில் வட பகுதி பாதுகாப்பு நிலைமை கள் பற்றியும் எதிர்கால திட் டங்கள் குறித்தும் ஆராய்ந்த தாக செய்திகள் தெரிவிக்கின் றன.

---

உ

## ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனை

உருத்திரபுரம் சிவன்கோயில் பிரதம குருக்கள்

**சிவத்திரு நாகேந்திரசர்மா அவர்கள்**

28-10-92ஆம் நாள் சிவபதமடைந்துள்ளார். இவர் எமது சகோதர பயிற்சி ஆசிரியர் பிரமஸ்ரீ நா இரத்தினேஷ் சர்மா அவர்களுடைய தந்தையார் ஆவார் இவரு டையபிரிவால் துயருறும் இரத்தினேஷ் சர்மாவுக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த துயரத் தைத்தெரிவிப்பதுடன் சிவத்திரு நாகேந்திர சர்மாவு டைய ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், விரிவுரையாளர்கள்
இந்துசமய நெறியினர்
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை,
கோப்பாய்.

(3553)

---

## 5-ம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 21 — 03 — 1966



உதிர்வு 30 — 10 — 1987

**செல்வி மேகலா நல்லதம்பி**

இருபத்தொரு ஆண்டில்
இம் மண்ணில் உன் வாழ்வு !
கருகிப் போகுமெனக்
கனவிலும் கருதவில்லை !

பெருகும் கண்ணீரால்
போகவில்லை உன் நினைவு !
வரும் காலமெல்லாம்
வாழ்வாய் வையமிதில் !!

விபுலானந்த வீதி,
வாழைச்சேனை.

பெற்றோர், உறவினர்,
நண்பர்கள்.

(சி-5287)

---

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

## 29. 10. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6368

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:-

27-7048, 27-4920, 26-4792, 27-6583, 24-4367, 27-5399, 26 8878, 42-1494, 27-3927, 27-9719, 42-4249, 26-3654, 24-4701, 28-854, 26-1698.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-

26-1728, 27-9033, 26-9158, 28-1085, 28-6020, 28-3[illegible] 28-4381, 24-6161, 26-0762, 41-9659, 41-9396, 42-332[illegible]

---

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.